# மறை ஞானப்பேழை




சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !


**October 2024 அக்டோபர் 2024**

Retail Selling Price 25

Page 1

Volume - 16, Issue - 8

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

மறை ஞானப் பேழை

**Be in all and get the power of God**


## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**

அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


**ஸஃபர் -ரபீவுல் அவ்வல்**

**அக்டோபர் 2024**

**Volume - 16 Issue -8**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்
திருமறைப் பக்கம்.
அமுத மொழிகள்.
உமர் (ரலி) புராணம் – நயம்.
அறபு இலக்கிய வளர்ச்சி
இலங்கை மீலாது விழா!.
கடலில் சுமந்து வந்த மீன்...
திருந்துமா சமுதாயம்!
கௌது நாயகம் (ரலி) உபதேசம்.
மௌலானா ! மௌலானா !
நாங்கள் கண்ட முஹிய்யுத்தீனிய சன்னிதானம்
பல்லக்கு தம்பி வலிய்யுல்லாஹ்.
சற்குரு சரித்திரம்.
மதுரஸா விழா உரைகள்... (தொடர்)
மற்றும் பல்சுவைச் செய்திகள்

# அள்ளித்தருவாய் யா அல்லாஹ்!

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் ஒரு தடவை கூறினார்கள்:

“எங்களுக்குக் கிடைத்த முரீதுகள்போல் எந்த செய்குக்கும் கிடைத்திருக்க மாட்டார்கள்” என.

உண்மைதான். வாப்பா நாயகம் சொன்ன வார்த்தையை முரீதுகள் தங்கள் நடை முறைகளால் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாப்பா நாயகம் அவர்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த மாதத்தை கௌரவிக்கும் வகையில் மீலாது விழாக்கள் கொண்டாடி கந்தூரிகள் கொடுக்கப்பட வேண்டுமென விரும்பினார்கள்.

அதனைத் தலைமேல் சுமந்து, ரமளானில் முப்பது நாட்கள் கொண்டாடுவது போல முப்பது நாட்களும், மேலும் பத்து நாட்களும் மௌலிது ஓதி, கந்தூரி கொடுத்து சிறப்பித்து வருகிறார்கள்.

இதற்கான பொருளாதாரத்தை எந்தத் தயக்கமும் இன்றி பிள்ளைகளே செலவு செய்து பிரமாண்டமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

முரீதுப்பிள்ளைகளின் தொடர் ஓதுதலைப் பார்த்து அநேக ஊர்களில் ஜமாஅத்தார்கள் மௌலிது– மீலாது– கந்தூரி – பன்னிரண்டு நாட்கள் தொடர் சொற்பொழிவு என தமிழகமே அமர்க்களப்படுகிறது.

குழப்பவாதிகள் கவலையோடு பேசத் தொடங்கி விட்டனர். நாம் இந்த ஷிர்க்கெல்லாம் ஒழிந்துவிட்டது எனப் பூரித்தோம். இப்போது முன்னர் இருந்ததைவிட பன் மடங்கு வேகமாக– வீரியமாக இவை நடக்கின்றன என அவர்கள் புலம்பத் தொடங்கிவிட்டனர்.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் நமது உயிரினும் மேலான உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருப்பேரர் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன்மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் என்பது உலகறிந்த உண்மை.

தங்கள் ஆத்மத் தந்தையின் ஆசையை –கனவை – உயிர்ப்பிக்கும் முரீதுப் பிள்ளைகள் வாழ்க வாழ்க எனப் பாராட்டுவோம். அவர்களுக்கு அல்லாஹ்வும் ரஸூலும் அருள் வளங்களையும் பொருள் வளங்களையும் அள்ளித்தர வேண்டுமென துஆ செய்வோம்.

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



இந்தச் சபை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் தவ்ஹீதென்னும் ஓரிறைக் கொள்கையை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதே.

அல்லாஹ்வை - ஹக்காகக் காட்டித் தந்தவர்கள் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள். அல்லாஹ் என்பதன் அறிவாக ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திகழ்ந்தார்கள்.

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

♦ **சி**ல கூட்டத்தார் தொழுகையில் வற்புறுத்தி அசுத்தத்துடன் தொழ நிறுத்துவார்கள். நாமோ தொழுகையின் உண்மையை மனதில் ஊற வைத்து உண்மையுடன் தொழச் செய்வோம். ஆதலால், நம் பிள்ளைகள் தொழுகையில் திடமாக இருக்கக் கூடியவர்கள். மேலும், சிலர் தொழாமலும் இருந்திருக்கலாம். சிலர் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலும் தொழுது வந்திருக்கலாம். இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத் தொழாதவர்கள் எனத் திட்டவட்டமாகக் கூறவும் முடியாது.


அதுபோல, நம்மையும் மட்டிடவும் முடியாது. எவரும் தவறாக மட்டிடுவதை எண்ணிக் கவலை கொள்வதோ, பயப்படுவதோ இல்லை. நாம் எமது மனம் சுத்தமாக, உண்மையாகவும், நீதமாகவும், ஒழுங்காகவும் இருக்க வேண்டும். எம்மை வீணாகவும், நயவஞ்சகமாகவும் பொய்யாகவும் எதிர்த்தவர்கள் ஹக்கின் கோபாக்கினியில் அகப்பட்டு எரிந்தனர். ஆதலால், உண்மையே எம் கோட்டை, நீதம், வலிமை, தைரியம், நேர்மை இவைகள் எம்வீரர்கள்.

♦ உலகத்தில் மனிதன் வாழும்போது எப்படி ரூஹ் பிரிந்திருக்கிறதோ அதுபோன்று அவன் இறக்கும்போதும் ரூஹ் பிரிந்துவிடும், உலகத்தில் மனிதன் வாழும்போது எப்படி ரூஹ் சேர்ந்திருந்ததோ அதே போன்று இறக்கும்போதும் ரூஹ் சேர்ந்தே இருக்கும், ரூஹ் என்று அவனிலிருந்து பிரிந்ததோ (அதாவது எப்போது இறந்தானோ) அப்போதே அது ஆதரவற்ற நிலையில் செயல்படத் தொடங்கும், இதுவே அதற்கு நரகவேதனையாகும், (அது என்பது ஆத்மா)

♦ இஸ்லாம் அறிவுப்பூர்வமான மார்க்கம், தத்துவப் பூர்வமான மார்க்கம், எல்லாத் தத்துவார்த்தங்களிலும் தவ்ஹீதென்னும் கலையே மிகவும் சிறப்பிற்குரியது, மிகவும் முக்கியமானதும் அதுவேதான்,

தவ்ஹீதை விளங்குவதற்கு ஏழு படித்தரங்களைக் கூறுகின்றனர். அவற்றில் 4 ஆவதுபடித்தரத்திலாவது இருக்க வேண்டும். தவ்ஹீதை விளங்கியவர்களிலேயே பல குழப்பங்களை நாம் காண முடிகின்றது.

***– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –***



## கொய்த மலர்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு)

وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّورَ خُذُوا مَا آتَيْنَاكُمْ بِقُوَّةٍ وَاسْمَعُوا

இன்னும் நாம் உங்களிடம் ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட பொழுது, தூர்மலையை உங்களுக்கு மேலே உயர்த்தினோம். உங்களுக்கு நாம் கொண்டுவந்த (வேதத்)தைப் பலமாகப் பற்றிக் கொள்ளுங்கள்; (நமது வார்த்தைகளுக்குச்) செவிசாயுங்கள் (என்றோம்)

قَالُوا سَمِعْنَا وَعَصَيْنَا

(நீர் சொன்னவற்றை) நாம் செவியுற்றோம். ஆயினும், நாம் சம்மதிக்கவில்லை. (மாறு செய்தோம்) என்றார்கள்.

وَأُشْرِبُوا فِي قُلُوبِهِمُ الْعِجْلَ بِكُفْرِهِمْ

அவர்களின் மறுப்பினிமித்தம் அவர்களின் உள்ளங்களிலே, காளைக் கன்றினை (வணங்கும் விருப்பம்) ஊறவைக்கப்பட்டுள்ளார்கள்.

(அவர்கள் பரிபூரணமான அல்லாஹுவை நிராகரித்ததனால் அவர்களின் உள்ளங்களிலே இணைவைத்து வணங்கும் வணக்கத்தின் ஆர்வம் ஊறிக் கடினமாய்ப் பதிந்துள்ளது என்பது கருத்து)

நீங்கள் (உங்கள் தவ்ராத் வேதத்தை) நம்பிக்கை கொண்டவர்களென்றிருந்தால், உங்களுடைய நம்பிக்கை (வெறுக்கத்தக்க செயலைச் செய்ய) எதை ஆணையிடுகிறதோ அது கெட்டுவிட்டது எனக் கூறுவீர்களாக.

(22) قُلْ إِنْ كَانَتْ لَكُمُ الدَّارُ الْآخِرَةُ عِنْدَ اللَّهِ خَالِصَةً مِنْ دُونِ النَّاسِ

(முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களைக்கொண்டும் அவர்கள் ஸஹாபாக்களைக் கொண்டும் நம்பிக்கை கொண்ட)

மனிதர்களல்லாது, (மற்றவர்களான) உங்களுக்கு அல்லாஹ்விடத்துள்ள மறுமையின் வீடானது சொந்தமாகிவிட வேண்டுமானால்,

فَتَمَنَّوُا الْمَوْتَ إِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ٩٤

(உங்களை சொற்களாலே) நீங்கள் உண்மை உரைக்கிறவர்களாயிருப்பின் (அந்த சுவர்க்கத்தை அடைவதற்காக) மரணத்தை விரும்புங்கள். என்று (நபியே) நீங்கள் (அவர்களிடம்) கூறுங்கள்.

[ஈமான் கொள்ளாதவர்கள் தவிர்ந்த ஏனையவர்களுக்கு மறுமையின் வீடு சொந்தமாக வேண்டுமானால் மரணத்தை விரும்புங்கள் என்பது கருத்து]

وَلَنْ يَّتَمَنَّوْهُ أَبَدًا بِمَا قَدَّمَتْ أَيْدِيْهِمْ ؕ

(யஹூதிய்ய செயல்களிலே) அவர்களுடைய கரங்களை முற்படுத்தியத (னிமித்தம் ஏற்பட்ட பாப காரியங்களி)னால் எப்பொழுதும் அ(வர்கள் இறப்ப)தை விரும்பவே மாட்டார்கள்.

وَاللّٰهُ عَلِيْمٌ بِالظّٰلِمِيْنَ ٩٥

அநியாய காரர்களை அல்லாஹ் மிக அறிகிறவன்.

---

**(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)**

93. உங்க(ள்மூதாதை)களிடம் நாம் வாக்குறுதி வாங்கிய நேரத்தில் அவர்களுக்கு மேல் (தூர்) மலையை உயர்த்தி உங்களுக்கு நாம் கொடுத்த (துவ்றாத்)தை உறுதியாகக் கடைப்பிடியுங்கள். (அதற்குச்) செவிசாயுங்கள் என்று கூறியதற்கு (அவர்கள் நீங்கள், கூறியதைச்) செவியுற்றோம். (ஆனால் அதற்கு) மாறு செய்வோம் என்று கூறினார்கள். ஆகவே அவர்கள் (நம் கட்டளையை) நிராகரித்(து மாறுசெய்தததன் காரணமாக அவர்களுடைய உள்ளங்களில் ஒரு காளைக் கன்றுடைய பிரியம்) ஊட்டப்பட்டார்கள். ) இந்நிலையிலும்) நீங்கள்(துவ்றாத்தை) நம்பிக்கை கொண்டவர்கள் என்று உங்களைக் கூறுவதென்)றால் இவ்வாறு செய்யும் படி உங்களைத் தூண்டும் அந்த நம்பிக்கை (மிகக்) கெட்டது என்று (நபியே) கூறுங்கள்.

94.(யூதர்களே) அல்லாஹ்விடமிருக்கும் மறுமை(யின் சொர்க்க) வீடு (மற்ற) மனிதர்களுக்கு இல்லாமல் உங்களுக்கே சொந்தமென (கூறுகின்ற) நீங்கள்

உண்மை கூறுபவர்களாக இருந்தால் (உங்களுக்குச் சொந்தமான அவ்வீட்டிற்குச் செல்வதற்கு) நீங்கள் மரணத்தை விரும்புங்கள் என (நபியே) கூறுங்கள்.

95. (ஆனால்) அவர்கள் கரங்கள் (செய்து) அனுப்பியிருக்கும் (பாவங்களின்) காரணத்தால் அதை அவர்கள் அறவே விரும்பவே மாட்டார்கள். (இந்த) அநியாயக்காரர்களை அல்லாஹ் நன்கறிவான்.

---

**இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.**

மதுக்கூர் வி.கே.எம். அப்துல் ரஸாக் அவர்களின் மகளாரும் ஸெய்யிது சலீம் மௌலானா அவர்களின் மனைவியும், ஸெய்யிது ரஷீது மௌலானா,ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா அகியோரின் தாயாரும், நஜ்முத்தீன் ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் மாமியாருமாகிய வஹீதா பீவி அவர்கள் வஃபாத் ஆனார்கள். அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவனப்பேறினை அருள்வானாக!

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதுப் பிள்ளை பரங்கிப்பேட்டை எஸ்.எம். செய்யது ஜியாவுதீன் மௌலானா அவர்களின் தம்பி எஸ்.எம். செய்யது அப்துல்காதிர் அவர்கள் சென்ற 15.9.24 ஞாயிறு அன்று வஃபாத் ஆனார்கள். அன்னாரது நல்லடக்கம் 16.9.24. திங்கள் கிழமை லுஹர் தொழுகைக்குப்பிறகு பரங்கிப்பேட்டை மீரா பள்ளிவாசல் மையவாடியில் நடைபெற்றது. அல்லாஹ் அன்னாரது பிழைகள் பொறுத்து சுவன வாழ்வை அருள்வானாக!

---

**வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்துவிட்டீர்களா?**

**மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

## பகுதாதுப் பேரரசர்!

கவீபா. ஆலிம் புலவர்.

முஹிய்யுத்தீன் ஆண்டகையை மறந்த கூட்டம்!
முஹிய்யுத்தீன் ஆண்டகையை மறுக்கும் கூட்டம்!
முஹிய்யுத்தீன் ஆண்டகை யார்? என்றே கேட்கும்
உலமாக்கள் ஒரு கூட்டம்! ஒரு காலத்தில்
முஹிய்யுத்தீன் பள்ளியென்றே ஊர்கள் தோறும்
உருவாகி மஸ்ஜிதுகள் இருந்த காலம்!
முஹிய்யுத்தீன் எனும் பெயரை பிள்ளைகட்கு
உவகையுடன் வைத்தழைத்த புனித மாந்தர்!

வஹ்ஹாபி ஸம்நாட்டில் புகுந்த பின்னே
வலிமார்கள் பக்தியெல்லாம் மறைந்து போச்சு!
அஹ்லு ஹதீஸ் அடுக்கடுக்காய் முளைத்தவர்கள்
அவ்லியாக்கள் இல்லையென துணிந்துரைத்தார்!
அஹ்லுபைத்தாம் பெருமானார் வழித்தோன்றல்கள்
அவனியெங்கும் நடமாடி அருள்வி தைத்தார்!
முஹிய்யுத்தீன் நாயகரோ அவர்களில் ஓர்
முத்தாக சத்தாகத் தோன்றி வந்தார்!

ஆண்டகையின் சேவையை அ ளந்து சொல்ல
ஆயுளொன்று போதாது! உபதேசங்கள்
தூண்டிவிடும் இதயத்தை இறையை நோக்கி
தூய்மையாய் மாறும்வரை துளைத்தெடுக்கும்!
சான்றுகளாய் கராமாத்து அதிசயங்கள்
சட்டென்று நடந்துவிடும்! விதியைக் கூட
ஏன் என்று கேட்டு அதை மாற்றி வைக்கும்
இறையோனின் ஆற்றலையே நேரில் காட்டும்!

பள்ளிகளில் முஹிய்யுத்தீன் ஆண்டகையின்
பயான்களெல்லாம் வாசிக்கச் செய்தல் வேண்டும்!
பிள்ளைகளுக் கவர்கள்திருச் சரித்திரத்தை
பேறாக தினம் கேட்கச் செய்ய வேண்டும்!
உள்ளத்தை சீராக்க அவர்கள் சொன்ன
உயர்வழியை சிந்தையில் கொள்ள வேண்டும்!
வள்ளலவர் திருநினைவை மக்கள் என்றும்
மறவாமல் இருக்க வகை செய்தல் வேண்டும்!

# திருக்குறள்

**வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை (512)**

செல்வம் வருவதற்குரிய வழிகளைப் பெருகச் செய்து அதனால் தன்னை வளமைப் படுத்திக் கொண்டு மேலும் தகுந்தவற்றை ஆராய்பவனே செயலைச் செய்வானாக!

---

**பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**
**வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்**
**வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே**
**தானே சிறியார் தொடர்பு.** *(நாலடியார்)*

---

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

صَفَر

**ஸஃபர்**

| | |
|---|---|
| 5 | ஸதக்கத்துல்லா அப்பா (ரஹ்) மறைவு |
| 10 | கமுதி முஸாபிர் வலி (ரஹ்) உரூஸ் |
| 14 | காயல் தைக்கா சாஹிபு (ரஹ்) மறைவு |
| 17 | கொடிக்கால் பாளையம் அப்துல் மஜீது ஸூஃபி (ரஹ்) உரூஸ் |
| 28 | இமாம் ஹஸன் (ரலி) ஷஹீது |

---

رَبِيعُ أَوَّل

**ரபீவுல் அவ்வல்**

| | |
|---|---|
| 1 | புனித மீலாது மாதம் தொடக்கம் |
| 10 | நாகூர் பாதுஷா (ரலி) ஜனனம் |
| 12 | சங்கைமிகு மீலாதுன்னபீ |
| 12 | க்வாஜா குத்புதீன் பக்தியார் காக்கீ (ரலி) மறைவு |
| 16 | நிளாமுத்தீன் அவ்லியா (ரலி) கந்தூரி |

---

அலி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் மூன்று விஷயங்களை மக்கள் விரைவாக இழக்க நேரிடும்

1. ஹலாலான பொருளாதாரம்
2. உண்மை பேசுகின்ற நாவு
3. ஆறுதல் அளிக்கக்கூடிய உண்மையான நண்பன்

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



## க ன வு

❖ கனவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்.

தேவையில்லாமல் கண்ட கனவுகளையெல்லாம் வைத்து மனதைக் குழப்பிக்கொள்வதால் பைத்தியம்தான் பிடிக்கும். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொள்ளக் கூடாது. மறந்து விட வேண்டும்.

❖ கெட்ட கனவுகளைக் கண்டாலோ அல்லது ஒருவர் கழுத்தைப் பிடித்து நெருக்குவது மாதிரி அல்லது அமுக்குவது போலவோ கண்டாலோ ஒரு மாட்டையோ, ஆட்டையோ, கோழியையோ அறுத்து ஏழைகளுக்கு சதக்கா கொடுத்துவிட வேண்டும். அதனால் தான் வீடுகளில் மாடு, ஆடு, கோழிகளை வளர்ப்பது நல்லது. நமக்கு வரும் முஸீபத்துக்கள் அதில் கழிந்து விடலாம்.

❖ கெட்ட கனவுகளைக் கண்டால் ஏழைகளுக்கு உணவு கொடுத்து விடுங்கள். பலர் தேவையில்லாமல் கனவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வீணாகிறார்கள்.

❖ மிஃராஜில் நாம் படிக்கக்கூடிய விசயங்கள் நிறைய உண்டு.

❖ அறிந்தவனுக்கு தஸ்பீஹும், எண்ணிக்கையும் தேவையில்லை. ஒரு முறை அல்லாஹ் என்று கூறினாலே போதும்.

❖ பயப்பட வேண்டிய அவசியம் சூஃபிக்கு இல்லை.

❖ ஆகிராவில் சேர்ந்து வாழும் முறையும் உண்டு. அர்வாஹுடைய ஆலம் என்பது கனவு போல. அறிந்தும் அறியாததுமான மயக்கமான நிலை.

## அமுத மொழிகள்

❖ எது எப்படி இருப்பினும் தற்பெருமை இருக்கக்கூடாது.

❖ அறிவு சம்பந்தமான விசயங்களில் புத்த பிக்குகள் நன்கு முன்னேற்றம் அடைந்துள்ளனர். முஸ்லிம் ஆலிம்களிடையில் அறிவு சம்பந்தமான எதுவும் காணோம். சில கிதாபுகளை படித்திருப்பார்கள்.

❖ இக்கால ஆலிம்களை விட நம் பிள்ளைகள் மேலானவர்கள்.

❖ சமுதாயம் முன்னால் இருந்ததை விட மித்தம் கீழ் நிலைக்கு வந்துவிட்டது. வஹ்ஹாபி – தப்லீக் – ஜமாஅத்தே இஸ்லாமி என்றெல்லாம் இருக்கிறார்களே. இப்படியே இஸ்லாம் இருந்தது என்றால் மோசமாய்ப் போய்விடும்.

❖ ரசூல் ﷺ அவர்களை ஈமான் கொண்டு பின்பற்றி வருபவன் எல்லா வகையிலும் நன்றாக இருப்பான். முனாஃபிக்காக இருக்க மாட்டான். முஸ்லிமாக இருப்பான். முஃமின் என்பதில் தௌஹீதும் சேர்ந்து விடுகிறது.

❖ அதனால்தான் முஃமின்களை (மட்டும்) பார்த்து இறைவன் ஸலவாத் சொல்லச் சொல்கிறான்.

❖ " இன்னல் முனாஃபிகீன வல் காஃபிரீன ஃபீனாரி ஜஹன்னம" என இறைவனே பிரித்துக் கூறிவிட்டான். இதில் முதலில் சொல்லப்பட்டது முனாஃபிக் தான்.

❖ ஊரில் முக்கால்வாசிப் பேர் முனாஃபிக்காக இருப்பார்கள். கூபா வாசிகள் முனாஃபிக்குகள்.

❖ முனாஃபிக்கிடம் மித்தம் கவனமாக இருக்க வேண்டும். காஃபிரோடு பழகலாம். ஆனால் முனாஃபிக் பொய் சொல்லுவான்.

❖ ஒருவரை முன்னால் பார்த்து ஒன்றும், பின்னால் போனபிறகு ஒன்றும் கூறுபவன் முனாஃபிக்.

❖ ஹக்கில் ஒன்றித்தபோது பாபங்கள் நீங்கும். ஹக்கே சுத்தம், கடல் எப்போதும் சுத்தம்தான். சாக்கடை நீர் கலந்தாலும் சுத்தமாகிவிடும்.

❖ எல்லாம் நம் அம்சம் என நினைப்பது முதல் நிலை. அனைத்திலும் தன்னை ஆக்கித் தன்னிலை மறத்தல் ஹக்கில் ஒன்றித்தலே.

# அமுத மொழிகள்

❖ சூஃபியாக்கள் கூறுவார்கள். ஒரு மாட்டை எங்கோ ஒருவர் அடித்தாலும் கூட அந்த அடியின் தாக்கம் இவர்களில் இருக்குமாம்.

❖ ‘ஜகந்தனில் மாறிமாறி உதயங் கொள்வோமே.’ இப்படிக் கூறுவது, மறுபிறப்பல்ல. தத்துவார்த்தத்தில்தான்:! ஒரே ஆள் மீண்டும் பிறப்பது தான் மறுபிறப்பு. ஆனால் இது (நாம் கூறுவது) ஆத்மாவின் வெளிப்பாடுதான்.

❖ ஒருவரிடம் (முக்கியமாக சொல்ல வேண்டிய விஷயத்தை அவருக்கு சொல்லாமல் மறைத்தால்) அவரிடம் கூறாதவரை அவர் மனம் எப்படி கஷ்டப்படுகிறதோ அதுபோல ஆத்மா அதனுள் இருக்கும் விஷயத்தை அது வெளிப்படுத்தாத வரை கஷ்டப்படத்தான் செய்யும்.

**ம று வு ல க ம்**

❖ உலகத்தில் மட்டுமே வாழ்க்கை என நினைக்கிறார்கள். இது கொஞ்சக்கால கூத்து; இதை நாம் ஒழுங்கு பண்ண வேண்டும். (அங்கே ஒன்றும்) இல்லை என்பவர்களுக்கு அங்கே போன பின்புதான் தெரியும். இவைகளை ரசூல் ﷺ அவர்கள் சும்மா கூறவில்லை.

❖ வபாத்திற்குப் பின் உள்ள விஷயத்தில் நாம் மித்தம் கவனமாக இருக்க வேண்டும். அதை ஈமான் கொள்ளச் சொல்லியே அல்லாஹ்வும் ரசூல் ﷺ அவர்களும் கூறுகிறார்கள். இவற்றை மறுப்பதற்கு நாம் வஹ்ஹாபிகள் இல்லையே.

**தூ க் க ம்**

❖ தூக்கமும் மரணம்தான். அனைத்து உணர்ச்சியும் போய்விடுகிறது. கனவு உணர்வு மட்டும்தான் வேலை செய்கிறது. இது இறந்தது போலத்தான். ஆனால் இறந்தவனுக்கு எந்த உணர்வும் இருக்காது. இதைப் பார்த்து மனிதன் பயப்பட வேண்டும்.

சில நேரம் கனவில் எங்கோ காணாத இடத்திற்குப் போனது போல் இருக்கும். அப்போது ரூஹானிகளின் (ஆத்மாக்களின்) தொடர்பு ஏற்படும். இதனால்தான் தூங்கிக் கொண்டிருக்கும் போது திடீரென எழுப்பக்கூடாது என்று கூறுவது.



# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**கோடிச் சிதறிவிடுங் கோடானு கோடியாம்
ஆடாச் சிலைகளெலா மாய்விலார் - பாடிப்
புகழ்வதனா லென்னாமோ பூவாட்கோ வாரா
இகழெய் துவரே யிதில்.**

## பொருள் :

கோடானு கோடி ஆடா அசையாச் சிலைகளெல்லாம் ஒருபோது வளைந்துடைந்து சிதறி விடுமாம். (அழிந்து விடும்) ஆராய்ந்து பாராதார் பாடிக் கற் சிலையைப் புகழ்வதனால் என்ன பயனாமோ? பூமியை (பிரபஞ்சத்தை) ஆட்சி செய்கின்ற அரசனான இறைவனைப் பற்றி ஆராய்ந்து (ஆர்வு செய்து) அறியாதார் இதில் இவ்விடயத்தில் இகழ்ச் சியை யெய்துவர்.

நாட்டில் கோடான கோடி சிலைகள் இருக்கின்றன. அவற்றை அறியா மக்கள் வணங்குகின்றனர். ஆனால் அவை உடைந்து சிதைந்துவிடும். சிலைகள் சக்தியற்றவை என்பதால் அதைக் கள்வர்கள் கவர்ந்து சென்று விற்கின்றனர். மழையில் –வெள்ளத்தில் அவை கரைந்து அழிந்துபோவதும் நிகழ்கின்றது. இத்தகு சிலைகளை வணங்கி மனிதருக்கு என்ன பயன்?

பிரபஞ்சத்தை ஆட்சி செய்யும் ஏக சக்தியை ஆராயாமல் அவனை அறியாமல் வாழ்வோர் முடிவில் இகழ்ச்சியையம் இழிவையும்தான் அடைவர்.

இந்தப் பாடலில் **பூவாட்கோ** எனும் வார்த்தைப் பிரயோகத்தை நாம் காண்கிறோம். நாமறிந்தவரை தமிழ்க் கவிதையுலகில் எந்தக் கவிஞரும், எந்தப் புலவரும் இப்படிக் கூறியதில்லை. பூ – என்று நாம் சொல்கின்ற பூமியை ஆள்கின்ற கோ– எனும் அரசனைத்தான் **பூவாட்கோ** எனும் வார்த்தைப் பிரயோகத்தால் நம்மை பிரமிக்க வைத்திருக்கின்றார்கள் நம் அருந்தமிழ் ஆசான் செய்கு நாயகம் அவர்கள்.

# இலங்கை வலிகமாவில்

# 19 ஆம் ஆண்டு மீலாது – கந்தூரிப் பெருவிழா!

இலங்கை வலிகமாவில் சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்கள் தொடங்கிய மீலாது– கந்தூரிப் பெருவிழா 19 ஆம் ஆண்டாக செப்டம்பர் 14 முதல் 16 ஆம் தேதி வரை வெகு விமரிசையாக – மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சங்கைமிகு குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாமிய் நாயகம் அவர்களின் மறைவுக்குப்பின் அவர்களின் திருப்பேரர். இளைய நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா பி.இ.எம்.பி.ஏ. அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாமிய் நாயகம் அவர்களின் தலைமையில் அலங்காரமாக நடைபெற்றது.

உலகின் பல நாடுகளிலிருந்தும் முரீதுகள் ஆனந்தத்தோடும் உற்சாகத்தோடும் வந்து கலந்து மன நிறைவடைந்தனர்.

இச்சிறப்புமிகும் விழாவில், எகிப்து மற்றும் மெரோக்கா நாட்டிற்கான அக்பரிய்யா தரீக்காவின் ஆத்மிகத் தலைவரும் எகிப்து தாருல் ஹகீகா ஆய்வு மைய நிறுவனரும் முதல்வருமான பன்னூலாசிரியர். டாக்டர். ஷெய்க் அஹ்மத் ஃபரீத் அல் மஸீதீ (அல்அஸ்ஹரீ) பி.ஹெச்.டி. அவர்கள். தமிழக ஆலிம் பெருமக்களான மௌலவி. ஹாபிழ். டாக்டர். எம். ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி. எம்.ஏ.பி.ஹெச். டி. (தலைவர் ஸுன்னத் ஜமாஅத் பேரியக்கம் சென்னை, ஆலோசகர். மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி, திருச்சி, முதல்வர். கைருல்பரிய்யா பெண்கள் அறபுக் கல்லூரி, சென்னை.) மௌலவி. ஹாஃபிழ். டாக்டர். வி.எஸ். அன்வர் பாதுஷா (உலவி) எம்.ஏ. எம்.பில்.பி.ஹெச்டி. (பொதுச்செயலாளர். தமிழ்மாநில ஜமாஅத்துல் உலமா சபை. மௌலவி. அல்லாமா. பி.எம். ஜியாவுத்தீன் பாகவி. (துணைத் தலைவர் தமிழ்மாநில ஜமாஅத்துல் உலமா சபை. மௌலவி. ஹாபிழ். ஏ.கே.ஏ. ஷர்புத்தீன் (ஃபைஜீ) ஹக்கிய்யுல் காதிரிய். நிறுவனர், முதல்வர், அல்ஜாமிஆ ஷஜரதுன் தய்யிபா ஃபீ தஃவதில் இஸ்லாமிய்யா பெண்கள் அறபிக்கல்லூரி, கூத்தாநல்லூர்.) ஆகியோர் கலந்து சிறப்புரையாற்றினர். டாக்டர். ஷெய்க் அஹ்மத் ஃபரீத் அல் மஸீதீ (அல்அஸ்ஹரீ) பி.ஹெச்.டி. அவர்களின் அறபி உரையை டாக்டர். எம். ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி அவர்கள் மொழிபெயர்த்தார். இலங்கை இர்பான் மௌலானா அவர்கள் தமக்கே உரிய சிறப்புடன் தொகுத்து வழங்கினார்.

ஹாஃபிழ். எஸ்.எஸ். அஹ்மத் ஸாலிஹ் ஃபஹீமி. பி.இ. எஸ்.எம். அபுல் பரக்காத் ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர் நபிபுகழ் கஸீதா இசைத்தனர். முன்னதாக கலீபா. ஆலிம்புலவர் யாநபிய்யல்லாஹ் பைத் இசைத்தார்.

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக சங்கைமிகு குத்புல் ஃபரீத். ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் ஆக்கிய **அல்இக்துத் தரார் ஃபீ ஷரஹிஸ் ஸஹீஹில் புகாரீ** இரண்டாம் பாகம் நூல் வெளியீடும், யாஸீன் நாயகம் அவர்களின் ஞான வெளிப்பாடாகிய **யவானிஉ அஸ்மாருந் நிஉமாவு** நூலுக்கு எகிப்து நாட்டின் அக்பரிய்யா தரீக்காவின் குரு, செய்கு அஹ்மத் ஃபரீத் அல்மஸீதீ அவர்கள் எழுதிய விரிவுரை நூலான **மிஷ்காத்துல் அவ்லியா ஷரஹ் யவானிஉ அஸ்மாருன் நிஉமா** உ அறபு நூலும், சங்கைமிகு குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் இயற்றிய **சிறார் பாடல்கள்** நூலும் வெளியிடப்பட்டன.

மேலும் சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் பேத்தியாரும், இளையநாயகம் அவர்களின் துணைவியாருமாகிய சங்கைமிகு ஜே.எப். எம். குறைஷ் கண்ணே அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய **பெய்த்** எனும் ஆங்கில நூலும் வெளியிடப்பட்டது.

விழாவில் அதிரை ஷர்புத்தீன் அவர்கள் முயற்சியில் அபுல் பரகாத் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் பாடிய **மெய்ஞ்ஞானத் தென்றல்** பென்டிரைவ் வெளியிடப்பட்டது.

நூற்களையும், பென் டிரைவையும், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா பி.இ. எம்.பி.ஏ.அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் வெளியிட முறையே சிறப்பு விருந்தினர்களான அறிஞர் பெருமக்கள் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும், சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசும் வழங்கி கௌரவித்தார்கள்.

16 .9.24 மாலை இலங்கை வானொலியில் மீலாது சிறப்பு நிகழ்ச்சித் தொகுப்பு வெளிவந்தது.

சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் விருந்தோம்பலின் தொடர்ச்சியாக அவர்களின் மருகர்கள் ஜமாலிய்யா அஸ்ஸையித் ஸாஜித் அலி மௌலானா, ஜமாலிய்யா அஸ்ஸையித் வாரிஸ் அலி மௌலானா, அஸ்ஸையித் ஸாஹித் அலி மௌலானாக்கள் மாறாத புன்னகையுடன் விருந்தினர்களைக் கண்ணியப் படுத்தினர். நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியுடன் விழா நிறைவு பெற்றது.

இந்த விழாவில் இவ்வாண்டு கலந்து கொண்ட முரீதுகள் அனைவரும் கண்ணெதிரே கலீல் அவ்ன் நாயகம் இருப்பது போன்ற அனுபவத்தை அவர்களின் திருப்பேரர் மூலம் கண்டு அனுபவித்தார்கள்.

வாப்பா நாயகம் அவர்களே போன்ற அமைதி, புன்னகை, கோரிக்கைகளை – குறைகளைக் கேட்டு வழி சொல்லும் பாங்கு, விழாவில் முன்வரிசையில் அமர்ந்து கவனித்து ரசித்த மாண்பு, அனைத்தும் முரீதுகளின் எதிர்கால நம்பிக்கைக்கு வித்தாக அமைந்தது.

வாப்பா நாயகம் அவர்கள் மறைந்துவிட்டார்களே... இனி – இந்த மீலாது எப்படித் தொடர்ந்து நடக்கும் பார்க்கலாம் என மனதில் கருவிக்கொண்டிருந்தவர்கள் ஏமாற்றமடைந்து போயிருப்பார்கள் என்பது திண்ணம்.

ஓர் உயர்ந்த நோக்கத்தில் உயர்ந்த லட்சியத்தில் தொடங்கிய இப்பயணம் இடையில் நிற்காது– நிறுத்த முடியாது என்பது நிதர்சனமான உண்மை.

# இரு நூற்கள் வெளியீடு.

**ச**ங்கைமிகு செய்கு நாயகம் குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் உஜூத், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் எழுதி அவ்வப்போது இதழ்களில் வெளிவந்த **சிறார் பாடல்கள்** நூல்வடிவம் பெற்று அழகிய முறையில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது.

பத்து தலைப்புகளில் இயற்றப்பட்ட பாடல்கள் தூய தமிழில் – அதே சமயம் எளிய தமிழில் இனிமை ததும்ப எழுதியுள்ளார்கள். வாப்பா நாயகம் அவர்கள் பெரியவர்களுக்கு கவிதை, உரை நடையென பல நூற்கள் தந்தார்களே... எங்களுக்கு என்ன தந்தார்கள் என, சிறார் சமுதாயம் ஏங்கிவிடக்கூடாதே என்பதற்காக இதனைத் தந்தார்கள் போலத் தோன்றுகிறது. வலிமார்கள் குழந்தைபோன்ற பால்மனம் கொண்டவர்கள். செய்கு நாயகம் அவர்கள் குழந்தையாக மாறி, கிளி, கொக்கு, பூனை, காகம்,பட்டம், என பலவற்றைப் பார்த்து ரசித்துப் பாடி இருப்பது அருமையிலும் அருமை.

இந்நூல் நம் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது. நம் குழந்தைகள் அவசியம் பாடிப் பழகவேண்டியது. நூல் கிடைக்குமிடம்.

ரபீவுத்தீன் ஆலிம் நூரீ, மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி, திருச்சி. போன்:9943786269 (அபூ பாஹிரா)

**Faith. என்றால் ஈமான் . அதாவது விசுவாசம். ,**

இதை எழுதியவர்கள் ஓர் இளம் வயது ஆசிரியை. புனிதமிக்க அஹ்லுல் பைத் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சங்கையும் மகத்துவமும் மிக்க நமது தர்பார் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் மகள்வழிப் பேத்தியும் சங்கைமிக்க நமது இளைய வாப்பா நாயகம் அவர்களின் துணைவியாரும் ஆவார்கள். இது அவர்களின் சிறப்புமிக்க இரண்டாவது ஆக்கமாகும். அல்லாஹ் தன்னுடைய படைப்பாகிய மனிதனை எவ்வாறெல்லாம் சோதிக்கிறான்? அதிலே மனிதன் எப்படியெல்லாம் தன்னுடைய விசுவாசத்தை நிரூபிக்க வேண்டும்? மேலும் ஒரு மனிதனுடைய தொழுகை எவ்வாறெல்லாம் . இருக்கவேண்டும்? அவனுடைய இறைஞ்சுதல்கள் எப்படி இறைவனால் ஏற்கப்படுகின்றன. ஒளு எடுக்கும் முறைகள், தொழுகை பற்றிய முக்கியத்துவம், மறுமை பற்றிய நம்பிக்கை போன்ற இஸ்லாத்தின் முக்கியக் கடமைகளை அல்குர்ஆன், ஹதீது, ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹுல் முஸ்லிம் போன்ற கிரந்தங்களிலிருந்து அழகிய மேற்கோள்களுடன் மிகவும் சிறப்பான முறையில் இந்தப் புத்தகத்தில் விளக்கி இருக்கின்றார்கள். அனைத்துக்கும் மேலாக சங்கைமிக்க வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் மேன்மைமிகு வழிகாட்டலில் உருவான இந்தச் சிறப்புமிக்க புத்தகத்தை இங்கே வெளியிடுவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம். மேலும் இதில் பல புதுமையான ஆங்கில வார்த்தைகளும் நமக்கு அறியக் கிடைக்கின்றன. (Vocabulary) இந்தச் சிறப்பு மிக்க புத்தகத்தை நாமும் நமது பிள்ளைகளும் அவசியம் வாசித்து அதன் மூலம் நற்பயனை அடையவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். (அப்பாஸ் ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரி)

---

ஒரு தடவை இமாமுல் முஹத்திஸ் இப்ராஹீம் இப்னு அத்ஹம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மக்காவில் உள்ள மலை ஒன்றின் மீது தமது முரீதீன்கள் சூழ அமர்ந்திருந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் இமாம் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் முரீதீன்களிடம், அல்லாஹ்வின் வலி ஒருவர், மலை ஒன்றைப் பார்த்து, அழிந்து விடு என்று சொன்னால் உடனே அது அழிந்து விடும் என்று கூறினார்கள். உடனே மலை ஆடத்தொங்கிவிட்டது.அப்போது இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரலி) அவர்கள் மலையே அசையாதே, ஓர் உதாரணத்துக்காகச் சொன்னேன் என்றார்கள்.

### உன் தரத்தை எவ்வறு கணிப்பாய்?

அஷ்ஷெய்ஹ் மஹ்ஃபூல் (ரலி) அவர்கள் கூறுகிறர்கள். உன்னுடைய தகுதியையும் அந்தஸ்தையும் கொண்டு குணங்களை நீ அளவிடாதே. மாறாக நல்லோர்களான சான்றோர்களின் தகுதியோடு உன் தகுதியை அளவிட்டுப் பார். அப்பொழுதுதான் அவர்களுடைய சிறப்பையும் உன்னுடைய இயலாமையையும் நீ அறிந்து கொள்வாய்!

# கடலில் சுமந்து வந்த மீன்...

ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி அல்ஹாஷிமிய் மௌலானா அவர்கள்

**இமாம் ஜமாலுத்தீன் அல் காதிரிய்யுல் பக்தாதி (ரலி) அவர்களை கடலில் சுமந்து வந்த மீன்...**

அஷ்ஷைஹு நிலாமுத்தீன் அல் காதிரிய்யுல் பக்தாதி (ரலி) அவர்கள் கூறியதாக, அஷ்ஷைஹு ஜமாலிய்யா அல் காதிரிய்யுல் பக்தாதி (ரலி) அவர்கள் சொல்கிறார்கள்:

எனது தகப்பனார் (ஜமாலுத்தீன் அல் காதிரிய்யுல் பக்தாதி (ரலி) அவர்களுக்கு வயது பன்னிரண்டு நிரம்பிய சமயம், இல்மு படிப்பதற்காக எனது தாயார் அவர்களின் சிறிய தகப்பனார் ஆகிய அல் இமாம் அல் பாழில் ஸய்யித் ஷைஹு அபீபுத்தீன் அல் காதிரிய் (ரலி) அவர்களின் வீட்டில் தங்கி வந்தார்கள்.

அது சமயம், மஸ்தான் ஸய்யித் ஷைஹு முஹம்மதுல் காதிரிய் அவர்கள் அறுபத்திரண்டு பகீர்களுடன் ஜீலான் என்ற பட்டினத்திற்கு வந்து இருக்கையில், அவர்களுடன் கூடி பதிமூன்று மாதகாலமாக நடை புரிந்து مَغْرِبُ என்ற மொரோக்கோ இராஜ்ஜியத்தில் நின்றும், இந்தக் கூட்டத்தை விட்டும் பிரிந்து, இருவராக திரும்பி வருகையில், வேறொருவர் (ஹம்து ஸாலிம் என்ற அரபியாகிய பக்தாதி ஒருவர்), பக்தாதுக்கு வரவேண்டுமென்ற நாட்டத்துடன் நடைபயணம் மேற்கொண்டார்கள்.

சில தூரம் கடந்த பிறகு فَقْتُ (பக்து) என்ற ஊரை அடுக்கவுமே, ஒற்றைக் கால் உள்ள மனிதர்களாக வாசம் செய்யும் ஊர் தளத்தில், இவ்விரண்டு பேர்களையும் அந்த பாசகர் கண்டு விரட்டவும், அவர்கள் மனிதரை தின்னுபவர்களாகையால், இவர்கள் இரண்டு பேர்களும் விரண்டோடி, அதில் திக்கில் ஒருத்தராய்ப் பிரிந்து, எனது தகப்பனார் அவர்கள் கடலில் பாய்ந்தார்கள்.

அவ்விதம் பாயவுமே ஒரு பலகை தாங்கினது போல் எனது தகப்பனார் அவர்களைத் தாங்கி, கரையில் நின்றும் பன்னிரண்டு காதம் (1 காதம் = 16 கிமீ) சென்றார்கள். அதே தருணம், பக்தாதிலிருந்து ஒரு கப்பல் ‘ அப்ராகிய்ய’ துறைமுகத்திற்கு போகும் வழியில், கப்பலின் இன்ஜின் சேதம் கண்டு, கப்பலின் ஓட்டம் நின்று விடுகிறது. உடனே கப்பலின் கேப்டன் ஆகிய ஹாஜி அஹ்மத் இப்னு முஹ்லார் என்பவர் அல்லாஹுதஆலாவிடம் முறையீடு செய்தார்:

“யா ரஹ்மானே! இந்தக் கப்பல் சுக வாழ்வுடன் ‘அப்ராகிய்ய’ துறைமுகம் போய் சேர்ந்ததாகில், எங்களின் கௌஸ் நாயகமாகிய ஸய்யிதினா அஷ்ஷைஹு கலீல் அல் காதிரிய் (ரலி) அவர்களின் செல்வப் புத்திரர் ஸய்யித் ஜமாலுத்தீன் (ரலி) அவர்களுக்கு ஆயிரம் தங்கப் பவுன் நேமமாகக் கொடுத்துவிடுவேன்!

இவ்விதம் முறையிட்டதுடனே, அல்லாஹுதஆலாவின் குத்ரத்தை கொண்டு கப்பலை ஓட்டி வரும் சமயம், எனது தகப்பனாரை கடலின் காண, கப்பலில் ஏற்றவும் செய்தார்கள். அப்பொழுது அவர்களை கடலில் சுமந்து வந்த வஸ்துவாகிறது திருக்கை மீனாக காணப்பட்டது.

பின்னால் அப்ராகிய்ய துறைமுகம் கண்டு காரியம் நடத்தி, பக்தாத் ஷரீஃப் துறைமுகம் கண்டு கப்பல் கேப்டனின் எண்ணத்தின் பிரகாரம் ஆயிரம் தங்கப் பவுனும் எனது தகப்பனார் அவர்களுக்கு கொடுத்து வீட்டில் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

எங்கள் தகப்பனார் அவர்கள் வீடு வந்து சேரவுமே சகல எங்கள் குடும்பத்தார்களும் மற்றும் பக்தாதில் உள்ள நல்லோர்கள் சகலரும் எனது தகப்பனாரை கண்ட சந்தோசத்தில் மனமகிழ்ச்சி அடைந்தனர்.

************

*இங்கு, அஷ்ஷைஹு ஜமாலிய்யா அல் காதிரிய்யுல் பக்தாதி (ரலி) எனப் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளவர்கள் நமது பாட்டனார், சம்பைப்பட்டினம், ஜமாலிய்யா தோட்டத்தில் மறைந்துவாழும் ஆத்ம ஞானச்சுடர், அஷ்ஷைய்கு ஜமாலிய்யா செய்யித் முஹம்மத் மௌலானா காதிரிய்யுல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களாகும்.

*மேலும், இதில் குறிப்பிடப்பட்ட ஸய்யிதினா கலீல் அல் காதிரிய் (ரலி) நாயகம் அவர்கள் ஹக்கிய்யுல் காதிரிய்யா ஸில்ஸிலாவில் நின்றும் خليل الاوّل (கலீல் அல் அவ்வல்) என்றும், திருச்சியில் மறைந்து வாழும் நமது பாட்டனர், குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜுத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் அல் ஹாஷிமி, வாப்பா நாயகம் (ரலி) அவர்கள் خليل الثاني (கலீல் அல் தானி) என்றும் அறியப்படுவார்கள்.

---

*மறுமை நாளில் எனக்கு நெருக்கமானவர்கள் என்மீது அதிகம் ஸலவாத்து கூறியவர்களே.*

*அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி). நூல்- திர்மிதி*

*(சுங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## இஸ்லாமிய இலக்கிய வகைகள்.

அன்றையப் புலவர்கள் மடைமை, குரோதம் குடும்பப் பற்றிற் பிடிவாதம், மூடக் கொள்கைகள் முதலானவற்றில் பாடல்கள் பாடி மாற்சரியம் விளைவிப்பவர்களாக இருந்தமையால் இக்குணங்களை ஒழிப்பான் வேண்டி அவ்விதப் புலைமையை மக்கள் நிராகரித்தார்கள். புலவர்களை வழிகேடர் தொடர்வர் என்று கூறினர். அவருக்கு (நபிக்கு) நாம் கவியைக் கற்றுக் கொடுக்கவில்லை என்றும் அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான். நாயகம்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உங்களில், ஒருவனின் உள்ளம் அழுகி ஊனத்தால் நிறைகிறது அவனின் வாய், பாட்டால் நிறைகிறதை விட அவனுக்கு நல்லதாகும்" என்றும் கூறினார்கள். இதனால் முஸ்லிம்கள் பாடுகிறதிலும் எழுதுகிறதிலும் பின்னோக்கியிருந்தனர். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் குரைஷ்களுக்குமிடையே பிணக்கம் கடுமையான போது, பெருமானார் அவர்கள் மீது ஈட்டியையும் நாக்களையும் தாராளமாய்ப் பிரயோகித்தார்கள். ஏகேச்சுவரத்திற்கும் விக்கிரகவாதத்திற்குமிடையே நடக்கும் யுத்தத்தின் பயனையும் முஹம்மது நபிகள் நாதருக்கும் குறைஷ்களுக்குமிடையே நடக்கும் போர் முறையையும் மக்கள் பார்த்திருந்தனர். அஞ்ஞான காலப் புலவர்கள், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அவர்களைத் தொடர்ந்தோ ரையும் வடுக்கள் நிறைந்த கவிகள் பாடி நோவினை செய்தார்கள்.

இது முஸ்லிம் புலவர்களை கோபமுண்டாக்கியது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த அஞ்ஞான காலப் புலவர்களுடன் பாட்டுப் போர் தொடுக்க அனுமதி கொடுப்பார்களோ வென்று முஸ்லிம் புலவர்கள் எதிர்நோக்கி இருந்தனர். பெருமானார் அவர்கள் அல்லாஹ்வுக்காகவும் அவன் திருத்தூதருக்காகவும் ஆயுதங்களைக் கொண்டு உதவியவர்கள்; இப்போது தங்கள் நாக்கு கொண்டு உதவ எப்பொருள் விலக்குகிறது? என்று கேட்டதும் ஸஹாபாக்களில் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) போன்றவர்கள் குறைஷ்களுடன் பாட்டுப் போருக்கு முற்பட்டனர். மத அனுமதியுள்ள முறைகளில் பாட்டுப் போர் தொடுத்தனர். அபூபக்கர் (ரலி) அவர்களிடம் சென்று எதிரிகளின் வடுக்களை அறிந்து கொள்க! அவர்கள் மிக அறிந்தவர்கள் என்று நபிகள் பிரான் கூறினார்கள். நான் குறைஷியாகவிருக்க நீர் எவ்வாறு குறைஷிகளுக்கு வடு கூறுவீர் என்று றஸூல் நாயகம் ஹஸ்ஸான் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ஸான் (ரலி) அவர்கள், நாயகமே மாவிலிருந்து உரோமத்தை உருவி எடுக்கிறது போன்று அந்த வடுவிலிருந்து தங்களை நான் உருவி எடுத்துவிடுவேன் என்று கூறினார்கள். அப்படியானால் அவர்களை வடுக்கூறும்; பரிசுத்த ஆவி உம்மிடம் என்றும் உண்டு என்றார்கள் நாயகம். பாட்டிலும் அறிவைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார்கள் நாயகம்.

(كعب بن زهير) கஉபிபுனு ஸுஹைர் என்பார் பெருமானார் சந்நிதானத்தில் அவரின் பெருமை மிக்க பானத் ஸுஆது (بانت سعاد) என்ற கவிதையைப் பாடி நாயகம் அவர்களின் பரிவட்டத்தைப் பெற்றார் என்ற கதை பிரபலமானது.

கீழ்வரும் இரண்டு அடிகளையும் பானத் ஸுஆதைப் பெருமானார் சந்நிதானத்தில் கஉபு பின் ஸுஹைர் அவர்கள் பாடினார்கள் என்பதற்கு சான்று பகரும்.

أُنْبِيْتُ انّ رَسُوْلَ اللّٰهِ اَوْعَدَنِيْ
وَالْعَفْوُ عِنْدَ رَسُوْلِ اللّٰهِ مَأْمُوْلُ

فَقَدْ اَتَيْتُ رَسُوْلَ اللّٰهِ مُعْتَذِرًا
وَالْعُذْرُ عِنْدَ رَسُوْلِ اللّٰهِ مَقْبُوْلُ

அல்லாஹ்வின் திருத்தூதர் எனக்கு எச்சரிக்கை செய்தார் என்று அறிவிக்கப்பட்டேன். அல்லாஹுவின் தூதரிடம் மன்னிப்பு விரும்பப்பட்டதாகும். அல்லாஹ்வின் தூதரிடம் மன்னிப்புத் தேடி வந்தேன். அவர்களிடம் மன்னிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டதாகும்.

இதிலிருந்து இஸ்லாமிய இலக்கியம் என்றால் இஸ்லாமிய வாழ்க்கைப் போக்கிற்கும் அதன் கொள்கைகளுக்கும் முரண்படாது அதன் சார்புள்ளதாய் இருத்தல் வேண்டும். புகழ், கல்வி, பிரார்த்தனை, போதனை, சத்திய சிந்தனை, தத்துவம், மெய்ஞ் ஞானிகளின் ஞான வெளிப்பாடுகள், இவ்வகைக் கீதங்கள், பாக்கள் அனுமதிக்கப்பட்ட இஸ்லாமிய இலக்கிய வகைகளாகுமென அறிகிறோம். அறிவுறுத்தும் கண்டனைகளிலும் கவிதைகள் புனையப்படுகின்றன.

பரஸ்தக் என்ற புலவர் (فَرَزْدَقْ) மக்கா சென்றிருந்தார். ஹஜ்ஜின் காலமாதலால் ஜன நெருக்கடி அதிகமிருந்தது. அப்துல் மலிக் அரசனின் மகன் இளவரசன் வலீது ஹஜருல் அஸ்வத் கல்லின் பக்கம் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவ்வேளை தியாகிகள் நாயகம் ஹுஸைன் (ரலி) அவர்களின் மகனார் வலீகள் திலகம் ஸெய்னுல் ஆபிதீன் (ரலி) அவர்கள் ஹஜருல் அஸ்வத் பக்கமாக வந்து கொண்டிருந்தார்கள். ஜனத்திரள் அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்குகிறதைக் கண்ட வலீத் அலட்சியமாக இவர் யார் என்று கேட்டான். இவ்வார்த்தை புலவர் பரஸ்தக் அவர்களுக்கு கோபத்தை மூட்டியது. அவர்கள் உடனே கீழ் வரு கண்டனக் கவிதையை அக்கூட்டத்தில் பாடினார்கள்.

هذاالّذِيْ تعرف البطحاء وطأته
والبيت يَعْرِفُهُ والحل والحرمُ
هذَابن خير عباداللّه كلّهم

هذالتقي النقي الطاهر العلمُ

وليس قولك من هذا يضائره

العرب تعرف من انكرت والعجم

اذا رأته قريش قال قائلها

الى مكارم هذا ينتهى الكرمُ

هذا معتر حبهم دين وبغضهم

كفر وقربهم منج ومعتصمُ

*"இவரின் கவுரவத்தை (காலடியை) பள்ளத்தாக்குகளும், பைத்துல்லாவும் (ஹரமும்) ஹில்லும் அறியும்.*

*இவர் அல்லாஹ்ுவின் எல்லா அடியார்களிலும் மேலானவரின் புதல்வர்.*

*இவர் பக்தரும் துப்புரவானவரும் தலைவருமாவார்.*

*இவர் யார்? என்ற உமது சொல் அவருக்குத் தங்கடம் செய்யாது.*

*நீர் அறியாத இவரை அறபுகளும் அஜமிகளும் அறிவர்.*

*குறைஷ்கள் இவரைக் கண்டால் சங்கைகளிலேயே சங்கை முடிவடையும் எனக் கூறுவர்.*

*இவர் ஒரு கூட்டத்தில் உள்ளவர். இவர்களை உவத்தல்* \ Vì Âï \ Vz D. Ö k ì ï ç á Â ¼ï V¸ Ý>_ *"குப்ராகும்." அவர்களை அணுகுதல் பாதுகாப்பும் தப்புதலுமாகும்."*

---

***நாயகம் அவர்கள் கூறினார்கள்:***

***நீங்கள் ஆட்சிப்பதவியை அடைய பேராசைப் படுகின்றீர்கள். ஆனால் அதற்காக மறுமை நாளில் வருத்தப்படுவீர்கள். (புகாரீ ஷரீப்-7148)***

# திருந்துமா சமுதாயம்?

கோவிந்தக்குடி மஹ்மூதா பீவி

வஹ்ஹாபிகளுக்கு எங்கள் ஊரில் நஜாத் என்று பெயர் வைத்து இருக்கிறார்கள். வஹ்ஹாபிகள் வீட்டில் பெண்எடுப்பதும் ஆண் கொடுப்பதும் கல்யாணம் வைத்து கொள்ள வேண்டாம் என்று நம் செய்கு நாயகம் சொன்னார்கள். ஆனால் 30 வருடத்திற்குமுன் இப்படி ஒரு சட்டம் இல்லை. எல்லோருமே சுன்னத்து ஜமாத்தாகத்தான் இருந்தார்கள். சுமார் 15 வருசத்திற்குள் யார் இப்படி முஸ்லிம்களைப் பிரித்தார்கள் என்று தெரியவில்லை. அது இருக்கட்டும். இப்போ என்ன நடக்கிறது என்று பார்த்தால் ஒரு மாடி வீட்டைவாங்கி அதை பள்ளிவாசல் என்று சொல்லி மோதினார் வைத்து தொழுகை நடத்த யார் வேண்டுமானாலும் தொழுகை நடத்துவார்கள். அதுவும் பரவாயில்லை. பெண்ணுக்கு நிக்காஹுக்கு வேறு ஊரிலிருந்து ஹஜ்ரத் வர வழைத்து நிக்காஹ் செய்வார்கள். அதுவும் தப்பு இல்லை. ஆனால் பெருநாள் முன்தினமே கொண்டாடுவார்கள். நோன்பும் பிறை எங்கேயோ கேள்விப் பட்டு முன்தினமே நோன்பு வைத்து விடுவார்கள். இப்படி இருக்க ஹிந்து மதத்தார்கள் இதைப் பார்த்து நாங்கள்ளாம் ஒரே தீபாவளி ஒரே பொங்கல் எல்லாம் ஒற்றுமையாகச் செய்வோம். உங்கள் மதம் ஏன் இப்படிப் போய்விட்டது என்று கேவலமாக பேசுகிறார்கள். ஜமாத்தார்கள் திருமணம் மண்டபம் சுமார் 600 பேர்கள் தங்கி சாப்பிடும் அளவுக்கு கட்டி முடித்தார்கள். வஹ்ஹாபிகளுக்கு இங்கு இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். வஹ்ஹாபிகள் என்ன செய்வதென்று தெரியாமல் முழிபிதுங்கினார்கள். வேறு மண்டபம் கட்ட இரண்டு கோடியாவதுவரும். இப்போ என்ன செய்யலாம் என்று யோசித்து வஹ்ஹாபிகள் ஒன்று திரண்டு ஊர்க்கூட்டம் போட்டார்கள். அது பெரும் சண்டையாக மாறி ஒரு வழிக்கு ஜமாத்தார்கள் வந்தார்கள். நீங்கள் எத்தனை ஆண்டு வரிப்பணம் கட்டவில்லையோ அதைக் கட்டினால் இடம் உண்டு என்று முடிவு பண்ணினார்கள். அந்த வரிப் பணத்தை கட்டினார்கள். அல்லாஹ் நாடினபேரை நேரானவழி செலுத்துவான். ஆமீன். ஆனால் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மௌலிதில் பங்கு பெற மாட்டோம். அந்த சாப்பாடு வாங்க மாட்டோம். ஆனால் அதற்குள்ள வரி ப் பணத்தை செலுத்துகிறோம் என்று சொல்லி விட்டார்கள்.

எங்கள் ஊரில் ஒரு குடும்பத்தில் எத்தனை பிள்ளைகளுக்கு கல்யாணம் ஆகி இருக்கிறதோ அத்தனை பேருக்கு வரி கட்டணும் என்று சட்டம். குடும்பம் தனியாகப்

பிரிந்து இருக்கலாம். சில குடும்பம் கூட்டுக் குடும்பமாகவும் இருக்கலாம். அதனால் இப்படி ஒரு சட்டம் ரசூல்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மௌலிதுவரும் ஒரு மாதத்திற்கு முன் ஹதீஸ் நடந்தது. அதில் அனைவரும் கலந்து கொண்டார்கள். இரண்டு ஆலிமாவை வேறு ஊரிலிருந்து வரவழைத்து பிரசங்கம் செய்தார்கள். அதில் ஒரு ஆலிமா குழந்தையை நல்ல வளர்ப்பு ஆக்கனும். அரபும் சேர்த்து படிக்க வையுங்கள் என்று நல்லவார்த்தையுடன் பேசி முடித்தார்கள். அடுத்த ஆலிமா என்ன பேசினார் தெரியுமா? நீங்களெல்லாம் அதிர்ச்சி ஆகிவிடுவீர்கள். மௌலிது ஓதும் சாப்பாட்டை தயவு செய்து வாங்காதீர்கள். அப்பொழுது பிள்ளைகளுக்கு கஞ்சி காய்ச்சி கொடுங்கள் என்று பேசினது அந்த ஆலிமா. இதை நான் கேட்டதும் ஆயிரம் பேர் உட்கார்ந்து அதை காதுதாழ்த்தி கேட்கிறார்கள் நான் அந்த கூட்டத்தில் ஒரே ஆள் எழுந்து போய் விட்டேன். அந்த ஆலிமா உடனே பயானை முடித்துவிட்டார். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னது எனக்கு நினைவு வந்தது. 4பேர் இருக்கும் போது ஒரு வரை புத்திசொல்ல கூடாது. தனிமையில் அழைத்து புத்திமதி சொல்லனும் என்றார்கள். அதனால் நான் எழுந்து போய்விட்டேன். நல்ல செய்தி பேசும் இடத்தில் நாம் போகக் கூடாது என்று சட்டம். ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நினைவு கூர்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

வஹ்ஹாபிகள் சொல்கிறார்கள். மௌலிது ஓதும்போது ஒரு வரியில் தாங்களன்றி எனக்கு உதவி தயவு செய்ய யாருமில்லை அதனல்தான் அல்லாஹ்வை நாடாமல் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நாடுகிறோமாம். அதனால்தான் அந்த சாப்பாடு பிடிக்க வில்லையாம். இவர்களெல்லாம் அல்லாஹ்வைத்தான் நாடுகிறார்களாம். நேரே சுவர்க்கம் செல்வார்களாம். இப்படி ஒரு பதில் உரைக்கிறார்கள். மாநபியைப் படைக்காவிட்டால் இந்த உலகத்தையே அல்லாஹ் படைக்கப் போவதில்லை என்கிறான். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யார் நேசிக்கிறார்களோ அவர்கள் ஹக்கை நேசித்தவர்கள் ஆவார்கள் (ஹதீஸ்). நல்லவர்களுக்கு ஒரு சொல்போதும். (மரம் வேறு இலைகள வேறு என்று நான் நினைக்கவில்லை.) அதனால் இவர்களிடத்தில் வாய் கொடுக்ககூடாது. என்று மௌனமாக வந்து விட்டேன். (மேல் கொண்டு நாம் பேசினால் பைத்தியகார சங்கிலியை ஆட்டிவிடும் (இமாம் கஸ்ஸாலி) ரஹ்மத்துல்லா).

என் மாநபியைப் புகழ்ந்து ஓதும் சாப்பாட்டை என் குடும்பத்தார்களே சொல்கிறார்கள். அந்த சாப்பாட்டை வீட்டுக்கு கொண்டு வராதீர்கள். அப்படியே வெளியில் போய் விடுங்கள் என்கிறார்கள். அதற்கு மாமனார் சொல்கிறார். குழம்பு மட்டும் வைத்துக் கொடு. ஏழை ஜனங்களுக்கு ஹிந்துகளுக்கு கொடுக்கிறேன்

என்றார்கள். மனம் திரும்பி ஒரு பெண் குழம்பு வைத்தது. ஹிந்துக்கள் அந்த சாப்பாட்டை க்கொடுத்து சந்தோசமாக சாப்பிட்டார்யூர் சென்று பிள்ளைகளை உடனே ஹோட்டலுக்கு அழைத்து கறிசாப்பாடு வாங்கி அந்தப் பிள்ளைகளை மனம் தேற்றுகிறார்கள். மக்காவில் போய்ப் பார்க்கத்தானே போகிறார்கள். நம் மாநபியை (அல்குர்ஆன்) முதல் ஜுஸ்உவில் தீயவர்கள்) தீயவழியில் செல்வார்கள்). (நான் நாடினால் நபியே ஒரே கவ்முகள் ஆக்கிவிடுவேன். என்கிறான் அல்லாஹ். சுன்னத்து ஜமாத்தார்களும் வஹ்ஹாபிகள் ஹதீஸ்கள் கேட்டு இப்படி மாறிப்போய் விட்டார்கள். அல்லாஹ் யாவரையும் நல்வழி செலுத்துவானாக. ஐந்துவக்து தொழுகையில் இதைத்தான் அல்லாஹ் அடிக்கடி அல்ஹம்து சூராவில் (முன்னோர்கள் வழிதவறி கூட்டத்தில் ஆகினது போல் எங்களையும் ஆக்கிடாதே. என்று. நம் அனைவரும் ஒருவக்து தொழுகையில் சுமார் 10தடவையாவது சொல்லுகிறோம். அதன் பொருட்டால் நம் அனைவரையும் நேர்வழியில் செலுத்துவான். ஆமீன். யாரப்பில் ஆலமீன். பிரஹ்மத்திக்க யாஅர்ஹமற்றாஹீமீன் .

---

**அலி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

♦ நிச்சயமாக ஒரு கூட்டம் சொர்க்கத்தின் மீதான ஆசையின் காரணமாக அல்லாஹ்வை வணங்கினால், அது வியாபாரிகளின் வணக்கத்தைப் போன்றதாகும், எந்த ஒரு கூட்டம் வேதனையை பயந்து அல்லாஹ்வை வணங்கினால் அது அடிமைகளின் வணக்கத்தைப் போன்றதாகும், எந்த ஒரு கூட்டம் இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக அல்லாஹ்வை வணங்கினால் அது சுதந்திரமானவர்களுடைய வணக்கத்தைப் போன்றதாகும்.

♦ அபு சுலைமானுத் தாரனீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எப்படி இறைப் பொருத்தம் கிடைப்பதற்கு போதும் என்ற தன்மை முதற்படியோ அதைப்போல் உலகப் பற்றற்று வாழ்வதற்கு முதற்படியே பேணுதலோடு இருப்பது தான்.

♦ இப்னு ஜவ்ஷீ (ரஹ்) கூறிகிறார்கள்: எல்லா கதவுகளுக்கும் திறவுகோல் உண்டு. ஞானத்திற்கான திறவுகோல் மனோ இச்சையை விட்டும் நீங்கி இருப்பதாகும்.

♦ இப்னு ஜவ்ஷீ (ரஹ்) கூறுகிறார்கள்:

♦ மனிதர்களின் உள்ளமோ இறைவனின் கைவசம் உள்ளது என்பதை மறந்து விட்டு, இந்த மனிதர்களின் உள்ளத்தில் இடம் பிடிக்க வேண்டும் என்பதற்காக பலவற்றையும் செய்பவர்களைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன்.

# மக்களே! மக்களே!

**ஹள்ரத் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் பயானிலிருந்து....**

இறைவனே பிறப்பையும் இறப்பையும் உண்டாக்கினான், அவன் எல்லோருக்கும் உணவு அளிக்கிறான். ஆனால், தான் மட்டும் சாப்பிடுவதில்லை. எவராயினும், துன்ப நிலையில் மனம் உருகி, அவனிடம் மன்றாடிக் கேட்டால், அவனுடைய துன்பத்தைப் போக்கி விடுகிறான். அவன் அருள் நிறைந்தவன். நீதியுடன் உலகத்தை நடத்துகிறான்.

மக்களே! உங்கள் ரட்சகன் மிகவும் அன்புள்ளவன். அவனுடைய அடியான் எத்தகைய குற்றம் செய்திருந்தாலும் அந்த அடியான், மன்னிப்புக்கேட்டு மனந்திரும்பினால், எல்லா ஆசைகளையும் விட்டுவிட்டு, இறைவனையே சார்ந்து விட விரும்பிவிட்டால், இறைவன் அவனுடைய மன்னிப்புக் கோரலை ஏற்றுக்கொள்ளுகிறான். தண்டிக்காமல் விட்டு விடுகிறான். அவர்களைத் தன் நேசராக்கி, தன் அருள் கதவைத் திறந்துவிடுகிறான். அவர்களுடைய பிரார்த்தனைகளைக் கேட்கிறான். அவர்களுடைய விருப்பப்படியே செய்கிறான். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பேறுகளுக்கு அதிகமான பேறுகளை அவர்களுக்கு அருள்கின்றான்.

மக்களே! இறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் இட்ட கட்டளைப்படியே நடக்கவேண்டுமென்று நான் உங்களை அழைக்கிறேன்!

இறைவனுக்குக் கீழ்படிதலின் முதல் நிபந்தனையானது, ஒவ்வொரு செயலிலும் இறைவனுடைய பொருத்தத்தை நாடுங்கள்! உங்களுடைய விருப்பங்களை மறந்து, இறைவனுடைய விருப்பத்தைப் பின்பற்றுவோராகி விடுங்கள்! அதாவது அவனுக்குப் பிரியமான செயலைச் செய்யுங்கள். அவனுக்கு விருப்பமில்லாதவற்றை நீங்களும் விலக்குங்கள். உங்கள் இறைவனை உங்களுக்கு இணக்கம் உள்ளவனாக நீங்கள் உங்களை அமைத்துக்கொண்டால், நீங்கள் எந்தத் தேவையைப் பற்றியும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. அந்த இறைவன் இவ்வுலகிலே உங்களுக்கு மேன்மையும், மரியாதையும், நிம்மதியும் உண்டாகும்படியான சூழ்நிலைகளை உண்டாக்கி விடுவான்.

உங்களுடைய உள்ளங்கள் இறைநேசமில்லாமல் வெறுமையாக இருப்பதை நான் காண்கின்றேன். உங்கள் நிலை பரிதாப நிலையே. இறைநேசமில்லாத இந்த வாழ்க்கையால் என்ன பயன்? அழிந்துபோகும் ஆசைகள் நிறைந்த ஒரு தொகுப்புத் தானே? இது ஒரு மறதிநிலை. இதன் விளைவு பயங்கரமானது இறைவனுடைய

நேசத்தை விட்டுவிலகிய உங்களுடைய இத்தகைய உலகவாழ்க்கையானது எத்தன்மையானதென்றால், அது அழியக்கூடிய ஆசைகளின் ஒரு தொகுப்பைத் தவிர வேறென்றுமில்லை. இது ஒரு பெரிய மறதி. இதன் விளைவு பயங்கரமானது. உங்களுடைய நிலையை உங்கள் இறைவன் அறியமாட்டான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்கள் செய்வதை யெல்லாம் புனிதமான அந்த இறைவன் அறிவான் என்பதை நினைவுபடுத்துங்கள். நீங்கள் செய்யும் அணுவளவுள்ள செயலையும் அவன் அறிவான்! ஆனால், இறைவன் அருளாளன், அன்புடயோன். ஆகையால், உங்களுடைய குற்றங்களை அவன் மன்னித்தருள்கிறான். ஆசைகளுக்கு அடியாகிவிட்ட மக்களே! இவ்வாறு நீங்கள் என்று வரை மறதியில் இருப்பீர்கள்? எழுந்திருங்கள்! உங்களது கீழான ஆசாபாசங்களை விட்டுவிட்டு, இறைவனுடைய விருப்பத்தின்படியே நடக்க முயலுங்கள். இறைவனை வணங்குவோரிலே, இறைவனுடைய இன்பத்தைப் பெறுவதற்காகவே தங்கள் வாழ்நாட்களையெல்லாம் அர்ப்பணித்து விட்ட, இறைவனுடைய அடியார்கள் இருந்த ஒரு காலமும் இருந்தது. அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு விநாடியேனும் இறைவனுடைய தொடர்பைவிட்டு விலகியிருக்குமானால், அவர்கள் துக்கப்பட்டுப் பரிதாபநிலை கொள்வார்கள். அவர்கள் ஒரு காலடி எடுத்து வைத்தால், (இயக்கம் செய்தால்) அச்செயல் இறைவனுடைய இணக்கத்தைப் பெறுவதற்காகவே செய்யப்பட்டது. அவர்கள் செய்யும் முயற்சிகளெல்லாம் இறைவனுடைய நாமத்தை விளம்பரப்படுத்துவதற்காகவே செயலாற்றப்பட்டன.

ஆனால், நீங்களோ, உங்களுடைய இறைவன் உங்களுக்கு அருளிய பேறுகளை மறந்துவிட்டீர்கள். இது பரிதாப நிலையாகும். உலகிலுள்ள இன்பங்களை அனுபவிப்பதற்காக, அதிலுள்ள சுகபோகங்களை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்காக, நீங்கள் உங்களை அர்ப்பணித்துக் கொண்டீர்கள்.

ஆனால், இப்பொழுதும் நீங்கள் உணர்வைப்பெற்று, இறைவனுடைய கட்டளைகளுக்குச் சிரஞ்சாய்ப்பீர்களானால், அவன் உங்களுக்காகத் தன்னுடைய அருள் நிறைந்த கதவுகளைத் திறந்தவிடுவான்!

## இறைவனைச் சமீபித்தல்

மனிதனே! ஆண்டவன் உனக்கு அளித்த பேறுகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்துவாயாக! பிறர் முன்னேறுவதைக்கண்டு பொறாமை கொள்ளாதிரு! சத்தியத்தை நாடுவோனே! இறைவனுடைய கட்டளைகளுக்குமுன் நீ தலைசாய்ப்பாயாக! அவன் எல்லாம் அறிந்தவன். அவன் எல்லாவற்றையும் பார்க்கிறவன். எல்லாம் வல்லவன், புனிதமானவன். இறைவன் உனக்கு நஷ்டம் உண்டாக்கினால், மற்றெவரும் அதைத் தடுக்கமுடியாதென்று இறைவனே

கூறுகின்றான். இறைவன் உனக்கு அருளிய பாக்கியங்களை நீ மதிக்காமலிருந்தால், அது பெரும் பாவமாகும். இறைவன் உனக்காக அருளிய இன்பங்களை அனுபவித்துக் கொண்டே, நீ இறைவனைக் குறை கூறுவாயானால்– அதாவது, இன்னும் அதிகமான இன்பங்கள் உனக்குக் கிடைக்கவேண்டுமென்று நீ விரும்புவாயானால் உன்னுடைய பொறுமையின்மையின் காரணமாக, நீ இறைவனுடைய பாக்கியங்களை அவமதித்தாய். இந்தக் குற்றத்தின் தண்டனையாக உன்மீது ஆண்டவனுடைய வேதனை கிடைக்கும். மேலும், உனக்கு அவன் கொடுத்திருக்கிற பாக்கியங்களையும் உன்னை விட்டுப் பிடுங்கிக்கொண்டு, நீ இறைவன் மீது குறை கூறியதை உண்மையாக்கிவிடுவான்.

அறிவின் பகைவனே! உன்னைத் துண்டு துண்டாக வெட்டினாலும், நீ இறைவன் மீது குறைசொல்வதை விட்டு விடுவாயாக! அறிவில்லாதவனே! அன்பும் அருளும் நிறைந்த உன் ரட்சகன் மீது நீ குறை கூறுகின்றாய் எனபதை நீ சிந்தனை செய்வாயாக! அன்பு நிறைந்தோரிலெல்லாம் அவனே மேலான அன்புள்ளவன். அதிகாரிகளிலெல்லாம் அவனே மேலான அதிகாரி. அவன் தனது அடியார்கள்மீது அநியாயம் செய்யமாட்டான். நமது நபிபெருமானாரவர்கள், “ஒரு தாய் தன் மகன்மீது அன்பாகயிருப்பதைவிட, ஆண்டவன் தன் அடியார்மீது அன்பாக இருக்கிறான்” என்று கூறியிருக்கின்றார்கள். என்வே, நான் உனக்கு நல்லுபதேசம் செய்வதைக் கேள். எப்பொழுதும் உன் இறைவனுடைய இணக்கத்தையே ஒவ்வொரு நிலையிலும் நீ முன்வைத்துச் செயலாற்று. அவனுக்குக் கீழ்ப்படியும் பணியில் நீ உன்னை அர்பணித்து விடு. அவன் உன்னைச் சோதிக்க விரும்பினால், அந்தச் சோதனைக்காக நீயும் உன்னைத் தயாரித்துக்கொள். பிறகு தன்னுடைய அருளால், உனக்குக் கிடைக்கவேண்டியதை விட அதிகமான பாக்கியங்களை உனக்கு ஆண்டவன் அருள்வான். பிறகு, அவனுக்கு அருகிலிருக்கும் படியான சிறந்த உயர்நிலையை உனக்கு அருளித் தன்னுடைய கருணை மழையை உன்மீது பொழிவான்.

மனிதனே! உன் ஆண்டவனுக்குக் கீழ்ப்படிவதற்காகவே நீ பிறந்திருக்கிறாய். ஆகையால், உன்னுடைய கடமையை மறந்துவிடாமல் உன் முன்னே வைத்துக் கொள். இறைவனுக்கு விரோதம் செய்தால் உனக்கு எவ்விதமான லாபமும் கிடையாது. இறைவனுடைய சக்திகளை நீ எதிர்த்து நிற்கமுடியாது. இதன் முடிவில் உனக்கு இழிவே உண்டாகும். ஆகவே, இறைவனுடைய கட்டளைகளை மறந்துவிடாதே! உன் வாழ்க்கையை நற்செயல்களுக்காக அர்ப்பணித்துவிடு. அவ்வாறு செய்வாயானால், இவ்வுலகில் உனக்கு உயர்வும், நலமும் கிடைக்கும். பிறகு, மறுவுலகிலும் அவ்வாறே நலம் பெறுவாய். நற்செயலுக்கு அழிவில்லை. தீமையானது எக்காலத்திலும் எழுச்சிபெறாது.

### சொல், செயல், மனத்தூய்மை

ஈமான் என்றால் என்ன? சொல்லும் செயலும் சேர்ந்ததே ஈமான்– இறை நம்பிக்கை. லா இலாஹ இல்லல்லாஹ். முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவனே. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ்வின் தூதர் என்று நாவால் மட்டும் நீங்கள் சொல்லிவிட்டால், அது ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. அப்படிச் சொல்வதால், உங்களுக்க எந்தவிதமான லாபமும் கிடையாது, கலிமாவில் இரண்டு சாட்சியம் கூறுகிறீர்களே, அதனால் உங்களுக்கு என்ன லாபம் கிடைக்குமென்று நினைக்கிறீர்கள்? நீங்கள், லா இலாஹ இல்லல்லாஹ் வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவனே என்று உறுதி கூறினால், அதற்கான சாட்சியம் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா? கட்டளைக்குக் கீழ்ப்படிதல், அதாவது, எது செய்யவேண்டாமென்று விலக்கப்பட்டிருக்கின்றதோ அதிலிருந்து விலகி நிற்கவேண்டும். துன்பமும் துயரமும் வரும்பொழுது பொறுமையுடன் இறைவனுடைய தக்தீர்– கற்பனைக்குத் தலைசாய்க்க வேண்டும். இவையே, நீங்கள் கலிமாவில் உறுதி கூறியதற்கான சாட்சியங்கள். நீங்கள் இவ்விதமாகச் செய்த பிறகும், நீங்கள் இறைவனிடம் மனத்தூய்மையுடன் நடந்துகொள்ளாவிட்டால், அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அதாவது, செயல் இல்லாத சொல்லும், உள்ளத் தூய்மையுடன், ஷரீயத்திற்குக் கீழ்ப்படிதலில்லாத செயலும் ஆண்டவனால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இறைவனுக்கு அஞ்சுங்கள்! அவன் உங்களுக்குக் கொடுத்திருக்கின்ற பாக்கியங்களுக்காக அவனுக்கு நீங்கள் நன்றி செலுத்துங்கள். ஆண்டவனுடைய ஏவல்களையும் விலக்கல்களையும் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். துன்ப காலத்தில் பொறுமையுடனும், இன்பகாலத்தில் நன்றியுடனும் இறைவனுக்கு இணங்கி நடந்து கொள்ளுங்கள். ஆண்டவனுக்குக் கீழ்ப்படியாமையிலிருந்து விலகி, அவனுக்குக் கீழ்ப்படிதல் என்னும் பாதையில் செல்லுங்கள். ஆண்டவனுடைய எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இன்ப காலத்தில் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துங்கள். கஷ்டகாலத்தில், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள்.

---

*தாய்நாட்டைக் காக்க உக்ரேனியர்கள் ஆயுதம் ஏந்தினால் அவர்களை மேற்கத்திய ஊடகங்கள் நாயகர்கள் என அழைக்கின்றன. அதுவே பாலஸ்தீன மக்கள் தாய்நாட்டைக் காக்க ஆயுதம் ஏந்தினால் அவர்களை தீவிரவாதிகள் என அழைக்கின்றன.*

# மவ்லானா! மவ்லானா!

*மர்ஹூம். அபுல் ஹஸன் ஆலிம் ஸித்தீக்கி – சம்பைப்பட்டினம்.*

ஸலாத்துல்லா ஸலாமுல்லா அலாதாஹா ரஸூலில்லா
ஸலாத்துல்லா ஸலாமுல்லா அலா யாஸீன் ஹபீபில்லா

அலா இன்ன வலிய்யல்லா அல் மவ்லானா ஜமாலியா
அண்ணல் நபியின் வழி பேரா அல் மவ்லானா ஜமாலியா
(அலா)
அல்லாஹ்வின் நேசரா யுலகில் அவதரித்தீர்கள் பக்தாதில்
அல்ஹஸனிய்யுல் ஹாஷிமி கிளையில் பிறந்திட்ட சய்யிது மவ்லானா
(அலா)
குத்புனா முஹ்யித்தீன் பேரர் சைய்யிது முஹம்மது நாதர்
நபிய்யுனா தீனின் நெறிகாத்தோர் மெய்ஞ்ஞான போதகர் மவ்லானா
(அலா)
இந்தியா சைலான் தேசங்களில் தவ்ஹீது இல்மைப் பரத்தியவர்
இர்பானின் இல்மையுடையவர்கள் மெய் குருவாய்த் திகழ்ந்த மவ்லானா
(அலா)
அஞ்சாது நெஞ்ச வீரத்தினால் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிந்தீர்
அஹ்மது நபிகளின் வழியில் அழைத்திட்ட அரபி மவ்லானா
(அலை)
தத்துவ ஞான போதகராய் தரணியில் வாழ்ந்த நாயகரே
தமிழகம் தான்நிலைகெண்ட தவத்திரு சம்பை மவ்லானா
(அலா)
எங்களிடம் எக்குறை இருந்தாலும் அவை எல்லாம் ஹக்கனிடம் கேட்க
மிக்கமனம் வருந்தும் எனதன்பு வாப்பா மவ்லானா
(அலா)
எனது மாதா பிதா குருவும் எல்லாமே தாங்கள் தானல்லவா
உங்களது மைந்தன் அபுல்ஹஸனின் தவத்திரு ஷைகு மவ்லானா
(அலா)
ஸல்லல்லாஹு அலாமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலாமுஹம்மது யாரப்பிஸல்லி அலைஹி வஸல்லம்

யாகலீல்

ஸல்லல்லாஹு அலா முஹம்மது

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# திருமண (நிக்காஹ்) நன்றி அறிவிப்பு

பேரன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதுஹு.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளாலும், இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் துஆ பரக்கத்தாலும் **நிகழும் ஹிஜ்ரி 1446 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதம் பிறை 25 க்கு (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை** பகல் 12.30 மணியளவில்

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுக்கா, மேலக்காவேரி (மர்ஹூம்) மௌலவி அப்துல ரஷீது பாகவி அவர்களின் மகன் வழிப்பேத்தியும், (மர்ஹூம்) முஹம்மது நஸ்ருதீன் **TTE (Srly)** அவர்களின் மகள்வழிப்பேத்தியும், ஜனாப் **A. முஹம்மது ஜுபைர்– தௌலத்துன்னிசா** இவர்களின் செல்வப்புதல்வி தீன்குலச்செல்வி

**M. நபிஹா பானு** M.B.A.

**மணாளியை**



திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், கோவிந்தகுடி, ஜாஹிர் உசேன் தெரு (மர்ஹூம்) வா.இ.சையது முகம்மது (மர்ஹூமா ஜீனத்து பீவி இவர்களின் மகன்வழிப் பேரனும், சோழபுரம், (மர்ஹூம்) முஹம்மது யாகூப் ராவுத்தர் – (மர்ஹூமா) ரஹ்மத் கனி இவர்களின் மகள்வழிப் பேரனும், ஜனாப் **வா.இ.சை.ஷேக் அலாவுதீன் – மஜீருல்லா** இவர்களின் செல்வப்புதல்வன் தீன்குலச்செல்வன்

**S. முகம்மது ஹசேன்** B.E., (Camp: Dubai)

**மணாளருக்கு**

நிக்காஹ் (திருமணம்) செய்ய பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் இம்மணவிழா **கோவிந்தகுடி,மதரஸா தாருல் உலூம் சமுதாயக் கூடத்தில்** நடைபெற்றதில் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தி துஆ செய்து உடன் நடைபெற்ற விருந்து உபசரிப்பிலும் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

**அவ்வண்ணமே அழைத்த..**

**வா.இ.சை. முஹம்மது பாரூக்**
**நீடாமங்கலம்.**
**வா.இ.சை. ஷேக் அலாவுதீன் – மஜீருல்லா**
**S. முஹம்மது உசேன் B.E., (கேம்ப் அபுதாபி)**
**A. சம்சுதீன் திருச்சி.**
2/271, ஜாஹிர் உசேன் தெரு,
கோவிந்தகுடி.
செல் 9994658682.

**குட்டீஸ்**

**ஹாருன் ரஷீது, அப்துல் காலித்,**
**நாதிரா, முன்தசீர், ரிஃபா,**
**சுமையா, நாஜிஃபா,**
**ரித்வான், ஆதிஃப்**

**தங்கள் அன்புள்ள...**

**A. முஹம்மது ஜுபைர் – தௌலத்துன்னிசா**
**M. முஹம்மது சுலைமான்**
**M. அஷ்ரப் அலி மேலக்காவேரி.**
**M. முஹம்மது இலியாஸ் (கேம்ப் துபாய்)**
**M. கலீமுல்லாஹ் அந்தமான்**
**H. நிஜார் அஹமது (கேம்ப் மலேசியா)**
**N. நிப்ராஸ் பானு**
2/404, 6-வது குறுக்குத் தெரு, ஜாமியா நகர், மேலக்காவேரி.
கும்பகோணம் செல் : 8925205370



மறைஞானப் பேழை ❖ அக்டோபர் ❖ 2024

# 1. நாங்கள் கண்ட முஹிய்யுத்தீனிய சன்னிதானம்

A. முஹம்மது ஜகரிய்யா பி. இ. ஹக்கிய்யுல் காதிரி .திருச்சி.

முன்னுரை.

அஸ்ஸலாமுஅலைக்கும்.

இந்த சரித்திரம் காதிமுல் அவுலியா ஸையத் முஹம்மத் ஹாஜியார் அவர்களின் தலைமுறைகளின் ஒரு மரத்துக்கிளைகள் என்ற குழுமத்தினர், இப்பிராந்தியத்தில் உதித்த முழு முஹ்யுத்தீனிய அவதாரங்களைப் பற்றியும் சங்கைக்குரியவாப்பா நாயகமவர்களை நாம் எப்படி அடைந்தோமென்பதுபற்றியும, வாப்பா நாயகமவர்களின் தொடக்க காலச்சம்பவங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்காக அக்பர் அலி ஹக்கிய்யுல் காதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க எழுதப்பட்டது.

இதன் தொடக்கத்தில் காதிமுல் அவுலியா ஸையத் முஹம்மத் ஹாஜியார் பற்றியும் அவர்களது குடும்பத்தில் நிகழ்ந்த விஷயங்கள், கராமத்துகள், இடம் பெற்றிருக்கும். அதற்குப்பிறகு சங்கைக்குரிய நமது வாப்பா நாயகமவர்கள், இருண்ட உள்ளங்களில் ஒளியைப் பாய்ச்சி தௌஹீதைப் பரப்ப நமக்காக எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதையும் வஹ்ஹாபிகளின் விஷவேர் பரவாமல் தடுக்க என்ன வெல்லாம் செய்தார்கள் என்பதையும், தௌஹீத் விஷயத்திலும், ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையை நிறுவி என்னவெல்லாம் சாதித்தார்கள் என்பதையும் காணலாம்.


எல்லோருக்கும் இவ்வுலகில் கிடைக்கப்பெறாத பாக்கியமாக இன்று நாம் பற்றிப் பிடித்துள்ள ஹக்கின் மள்ஹரான இந்த தர்பாரை நாம் எப்படி அடைந்தோம் என்பதைப் பற்றியும் இந்த சன்னிதானத்தில் எனக்கு நிகழ்ந்த கராமாத்களையும் இங்கு பதிவிடுகிறேன். இங்கு பதிவிட்டிருக்கும் எனது வயதிற்கு முற்பட்ட சரித்திரங்களில் பெரும்பாலானவைகள் கலீஃபா அல்ஹாஜ் அப்துல் கரீம் (ஜமாலி) அவர்கள், மற்றும் எனது மூத்த சகோதரர் டாக்டர் அஷ்ரப் அலி அவர்கள் மூலமாகவும், மேலும் குத்புல்மத்ஹரி (ரலி) அவர்களின் நெருக்கமான அஹ்பாப்

மதுரை அப்துல் காசிம் பெரிய வாப்பா, எனது பெரிய தந்தையார் முஹம்மது இஸ்மாயில் ஹக்கிய்யுல் காதிரி, மற்றும் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த சபையின் பெரியார்கள் மூலமாகவும் வாய்வழியாக அறிந்த மனதில் பதிந்தவைகளே.

பத்தொன்பதாம் நூற்றாண்டு கடைசியிலிருந்து இருபதாம் நூற்றாண்டில், ஒரே காலகட்டத்தில் குத்புமார்கள், பலவலிமார்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள தமிழ்நாடு மற்றும் இலங்கை பிராந்தியத்தில் இருந்து நமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். **இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் ஒருவர், இவ்வுலகில் ஒரு மஹான் தோன்றிவிட்டார் என்பதை எப்படி அறியமுடியும் என்று கேட்டதற்கு அவர்கள், சூரியன் உதித்துவிட்டதை எவ்வாறு உலகில் உள்ள ஜீவராசிகளெல்லாம் அறிகிறதோ அப்படித்தான் இந்த உலகில் மஹான்களின் தேட்டம் உள்ள ஒவ்வொரு மனிதனும் அறிந்து கொள்வான் என்று கூறினார்கள். அப்படியாயின் இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாமெல்லோருக்கும் மஹான்களை அடைய வேண்டும் என்ற நாட்டம் இருந்திருக்கிறது.**

இந்தப் பிராந்தியத்தில் இருந்த குத்புமார்கள், வலிமார்கள், சூபியாக்கள், அறிஞர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பில் இருந்தார்கள். சங்கைக்குரிய யாஸீன் நாயகமவர்கள் *நாமும் குத்புல் மதுஹரியும் ரூஹின் புறத்தால் கணநேரமும் பிரிவதில்லை* என்று சொன்னார்களாம்.


சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களும் குத்புல் மதுஹரி அவர்களைப்பற்றி கீழ் வருமாறு.... வாப்பா நாயகமவர்கள் முதல் இந்திய விஜயத்தின் போது கலீபா அப்துல் கரீம் அவர்கள் கொடுத்த குத்புல் மதுஹரியின் ஆக்கங்களை வாசித்து விட்டு கீழ்வருமாறு எழுதியுள்ளார்கள்


ளார்கள். எனக்குச் சிறு வயதில் கிடைத்த
பாக்கியம் அனைத்தும் குத்புல் மதுஹரி அவர்
களின் ருஹ்கள் எனக்கு பரிசளித்தது
அத்வைத காரணத்திலிருந்தும், மஹானைந்த இதத்
(D.T.O)

திலிருந்தும் கண்கூடாகக் கண்டேன். எனது
தப்பற்ற மனதுள்ளிருந்த தத்துவங்களை புத்தகமே
மாக வெளியிட்டார்கள். ஆதி எனது வாப்பாவாய்


**எனக்குச் சிறு வயதில் கிடைத்த பாக்கியம் அனைத்தும் குத்புல் மத்ஹறி அவர்களின் (நீங்கள் எனக்குப்பரிசாகத் தந்த) அத்வைத கானத்திலிருந்தும் மஹானந்த கீதத்திலிருந்தும் கண்கூடாகக் கண்டேன். எனது ஒப்பற்ற மனதுள்ளிருந்த தத்துவங்களை புத்தக ரூபமாக வெளியிட்டார்கள்.**

1968 இல் வாப்பா நாயகமவர்கள் குத்புல் மதுஹறி அவர்களின் ஸியாரத்துக்கு செல்வது பற்றி எழுதியபட்டோலை.......



**குத்புல் மத்ஹரீ (ரலி) அன்ஹு அவர்களை விழாவில் அல்லாமல் தனிமையாய் சந்திப்பது ரூஹிய்யத்தான சில விசேஷச் சந்திப்பை அருளும். எனவே சௌகரியம் போல் விழாவில் அல்ல தனிமையில் சந்திப்போம். ஹக்கின் திருவருளால் திண்டுக்கல்லில் நீங்கள் கூறுவதுபோல் உங்கள் விருப்பம் போல் தங்குவோம்.**

குத்புல் மதுஹறியின் தர்ஹா கூரைக் கொட்டகையாக இருந்தது. 1968 இல் வாப்பா நாயகத்தால் அடிக்கல் நாட்டப்பட்டு அவர்கள் அடுத்த வருடம் இந்திய விஜயத்திற்கு முன் கட்டி முடிக்கப்பட இருக்கிறது என்ற செய்தி அறிந்து எழுதிய 18.07.96 பட்டோலை......



**குத்புல் மத்ஹரீ (ரலி) அவர்களின் மக்பரா ஷரீப் பூர்த்தியடைந்தது அறிந்து மிகமிக ஆனந்தமடைகிறோம் ஹக்குக்கு சுக்று......**

**ஹக்கு மக்பராவின் தேவைகளைப் பூரணமாக்குமாக. கீழக்கரையில் மறைந்த மத்ஹரியும் வெலிகாமத்தில் உதித்த கலீல் ஔனும் ஒரு தாற்பரியதததில் விரவிய ஒன்றேயாம் நாமே அங்கே......**

என்று எழுதியுள்ளர்கள. இப்பிராந்தியத்தில் உதித்த நாதாக்களில்.....

**குத்புமார்கள்**

1. அல்குத்பு ஸைய்யித் முஹம்மத் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனி ஹாஷிமி நாயகம், (ஜமாலியா மௌலானா நாயகம்).

2. குத்புல் மத்ஹரி மஹானந்த பாபாநாயகம்.

3. குத்புல் அக்தாப் யாஸீன் நாயகம்.

4. குத்புஸ் ஸமான் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள்.

**வலிமார்கள்**

1. ஸாஹிபுல் வக்த் நாஇபுர் ரஸுல் ஷெய்கு பத்ருத்தீன் படேஹளரத் (படேஸாகிப் என்றும் மஞ்சவி நாயகம் என்றும் அழைக்கப்பட்டார்கள்)

2. கல்வத்து நாயகம் என்று பெயர் விளங்கிய தைக்கா ஸைய்யிது அப்துல்காதிர் வலியுல்லாஹ்.

3. ஹைதராபாத் ஸுஃபி ஷாஹ் முஹம்மது அப்துல் காதிர் ஹளரத் வலியுல்லாஹ்.

4. மௌலானா மௌலவி அல்ஹாபிழ் பொதக்குடி ஸர்தார் அப்துல் கரீம் ஹள்ரத் வலியுல்லாஹ்.

5. மௌலானா மௌலவி கமாலுதீன் ஹள்ரத் வலியுல்லாஹ்.

6. மௌலானா மௌலவி மதுரை ஸைய்யிது முஹம்மது ஹள்ரத் வலியுல்லாஹ்.

7. பல்லாக்கு வலியுல்லாஹ் என்று பெயர் விளங்கும் அல்ஹாபிழ் ஆலிம் ஹபீப் முஹம்மது ஸதக்கத்துல்லாஹ் வலியுல்லாஹ்.

**ஆலிம்கள் மற்றும் பெரியார்கள்.**

1. ஆயக்குடி ஸூஃபி ஹுஸைன் முஹம்மத் ஆலிம் ஹள்ரத்

2. திண்டுக்கல் பாபு ஹள்ரத் என்ற அப்துல் கரீம் ஆலிம் ஹள்ரத்

3. நெல்லிக்குப்பம் அப்துல் ரஹ்மான் ஆலிம் ஹள்ரத்

4. நாகூர் யாஸீன் ஆலிம் ஸாஹிப்.

5. காதிமுல் அவ்லியா பெருவணிகர் ஸைய்யிது முஹம்மது ஹாஜியார்.

6. பெருவணிகர் மாப்பிள்ளை மீரான் முஹ்யுத்தீன் ராவுத்தர், பேகம்பூர்.

7. அபிராமம் அப்துல்காதிர் ஆலிம் ஹள்ரத் (மவாஹிபுர்ரஹ்மானிய்யா ஆசிரியர்)

8. அஹமத் இப்ராஹிம் ஆலிம் (குத்புல் மத்ஹரியின் மவாஹிபுர் ரஹ்மானிய்யாவில் மஃஷூ கிய்யா பைத்தை உருவாக்கியவர்)

9. அபுல் ஜமால் முஹம்மது பதுறுதீனுல் காதிரிய்யுல் நூரிய்யு (பொதக்குடி சர்தார் அப்துல் கரீம் ஆலிம் வலிய்யுல்லாஹ்வின் மௌலிதை கோர்வை செய்தவர்கள்)


10. மௌலானா மௌலவி. சூபி அமீர்பாஷா ஹள்ரத், கலிக்கம்பட்டி (காந்திகிராமம்)

11. கொடிக்கல்பாளையம் அப்துல் மஜீத் சூபி (ஹைதராபத் சூபி ஹள்ரத் வலயுல்லாஹ் அவர்ளின் சரித்திரத்தை தமிழில் எழுதியவர்).

12. காயல்பட்டினம சூபி என்று அறியப்பட்ட, அப்துல் காதிர் ஆலிம் நூரி. (அபூபக்கர் சித்தீக் நாயகம் பரம்பரையில் வந்தவர்கள்). ஹைதராபாத் சூபி வலியுல்லாவின் கலீபா, தப்லீகை முழு மூச்சாக எதிர்த்தவர்கள்)


1920 களில் குத்புல் மத்ஹரி மஹானந்த பாபா அவர்கள் திருப்பத்தூரில் தங்கி ஆன்மீக ஆட்சிபுரிந்தார்கள். தங்களை முஹ்யுத்தீனியத் தோன்றல் என்று பட்டவர்த்தனமாகப் பிரகடனப்படுத்தியிருந்தார்கள், அவர்கள் திருப்பத்தூர் அவ்லியா என்றும் அழைக்கப்பட்டார்கள். அவர்களைக் காண வேண்டி யாஸீன் நாயகமவர்கள் சர்வ கலாசாலையில் படிப்பை முடித்த பிறகு ஒரு முறை திருப்பத்தூர் சென்று பேருந்திலிருந்து இறங்கி ஒவ்வொருவராக பலரிடம் திருப்பத்தூர் அவ்லியா அவர்கள் இருப்பிடம் எங்கு உள்ளது என்று வினவினார்கள். அனைவரும் அங்கு போக வேண்டாமெனவும் அங்கு இஸ்லாமில் இல்லாத காரியங்கள் நடப்பதாகவும்


கூறினர். கடைசியாக ஒருவரிடம் அவர்களின் இருப்பிடம் எங்குள்ளது என்று மட்டும் சொல்லுங்கள், வேறு ஒன்றும் கூற வேண்டாம் என்று சொல்லி இருப்பிடத்தை கண்டு பிடித்து அங்கு சென்று சந்தித்தனர். யாஸீன் நாயகமவர்கள் குத்புல் மத்ஹரியிடம் விடை பெற்று வரும் போது யாஸீன் நாயகமவர்கள் பின் வரும்காலத்தில் அடையும் மகோன்னதமான நிலை (மகாம்) பற்றி குத்புல் மத்ஹரி அவர்கள் அபூர்வமான மூன்று வரிகளில் கீழ்க்கண்டவாறு எழுதிக்கொடுத்த பைத்து.......


إن تكن بل انت هو ✝ انت ظل الغيب من اسمائه والشمس هو ✝

குத்புல் மத்ஹரி மஹானந்தபாபா அவர்கள் யாஸீன் நாயகமவர்கள் பற்றி எழுதிய பைத்தை சங்கைக்குரிய யாஸீன் நாயகம் கலீபா அப்துல் கரீம் ஜமாலி அவர்களுக்கு எழுதிய 05.07.1965 பட்டோலையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**குத்புல் மத்ஹரிய்_அவர்கள் நம்மைப்பற்றிக் கூறியதாவது....**


குத்புல் மத்ஹரிய் அவர்கள் நம்மைப்பற்றிக் கூறியதாவது:
إن تكن بل أنت هو ✝ انت ظل الغيب من اسمائه والشمس هو ✝
பைத்து: நீங்கள் ஆயிருந்தால் எங்கிலும் நீங்கள் அந்த ஹக்குத்தான். அந்த ஹக்கின் திருநாமங்
(P.T.O)


களிலுள்ள மறைந்த நிழலும் நீங்கள் தான், சூரியனும் அந்த ஹக்குத்தான்.
இதில் சூரியனும் அந்த ஹக்குத்தான் என்று கூறியதில் நமது [illegible] அதுவிளங்கு கிறது. [illegible]


**கருத்து: நீங்கள் ஆயிருந்தால் எங்கிலும் நீங்கள் அந்த ஹக்குத்தான் அந்த ஹக்கின் திருநாமங்களிலுள்ள மறைந்த நிழலும் நீங்கள் தான், சூரியனும் அந்த ஹக்குத்தான். இதில் சூரியனும் அந்த ஹக்குத்தான் என்று கூறியதில் நமது குத்பிய்யத்தை அதுவிளக்குகிறது.**

05.078.1965 பட்டோலை..

குத்புல் மத்ஹரி மஹானந்தபாபா அவர்கள் யாஸீன் நாயகமவர்கள் பற்றி எழுதிய பைத்தை சங்கைக்குரிய வாப்பா நாயகம் கலீபா அப்துல் கரீம் ஜமாலி அவர்களுக்கு எழுதி 08.08.1967 பட்டோலையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

08.08.1967 பட்டோலை....


குத்புல் மத்ஹரீ அவர்கள் எனது வாப்பா நாயகத்தைப் பார்த்து என் வாப்பா நாயகம் அவர்களின் குத்பியத்தை கீழ்காணும் பைத்தில் கூறினார்கள். என் வாப்பாநாயகம் அவர்கள் இந்த பைத்தை உங்களுக்கு அனுப்பினார்கள். உங்களிடமுண்டு அது ....



உ

குத்புல் மத்ஹரீ (ரலி) அவர்கள் எனது வாப்பா
நாயகத்தைப் பார்த்து என் வாப்பா நாயகம்
அவர்களின் குத்பிய்யத்தை கீழ்க்காணும்
பைத்தில் கூறினார்கள். என் வாப்பா நாயகம்
அவர்கள் இந்த பைத்தை உங்களுக்கு அனுப்
பினார்கள். உங்களிடமுண்டு அது.

إِنْ تَكُنْ بَلْ أَنْتَ هُوْ * أَنْتَ ظِلُّ الْغَيْبِ مِنْ أَسْمَائِهِ
وَالشَّمْسُ هُوْ *




குத்புல் மத்ஹரிய் அவர்கள் நம்மைப்பற்றிக்
கூறியதாவது:

إِنْ تَكُنْ بَلْ أَنْتَ هُوْ * أَنْتَ ظِلُّ الْغَيْبِ مِنْ أَسْمَائِهِ وَالشَّمْسُ هُوْ *

கருத்து: நீங்கள் ஆயிருந்தால் எங்கிலும் நீங்கள்
அந்த ஹக்குத்தான். அந்த ஹக்கின் திருநாமங்

(P.T.O)


ஒளியுள்ள மறைந்த நிழலும் நீங்கள் தான்,
சூரியனும் அந்த ஹக்குத்தான்.
இதில் சூரியனும் அந்த ஹக்குத்தான் என்று
கூறியதில் நமது இத்ப்பய்யத்தை அதுவிளங்கு
கிறது. رضي الله - الله.

(தொடரும்)

---

**நபி (ஸல்) அவர்கள் வயது எவ்வளவு?**

ஒரு முறை நம் உயிரினும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜிப்ரயீல் அவர்களிடம் உங்களுடைய வயது எவ்வளவு? என்று கேட்டார்கள். அதற்கு ஜிப்ரயீல் அவர்கள் எவ்வளவு என்று எனக்குத் தெரியவில்லை ஆனால் நான்காவது வானில் 70000 ஆண்டுகளுக்கு ஒரு முறை நட்சத்திம் ஒன்று மின்னும், அதை நான் 72000 முறை மின்னுவதைப் பார்த்திருக்கிறேன் என்று கூறினர்கள் இதைக் கேட்ட அகிலத்தின் அருட்கொடையான அண்ணல் நபியவர்கள்,

அல்லாஹ்வின் கண்ணியத்தின் மீது சத்தியமாக நான் தான் அந்த நட்சத்திரிம் என்று கூறினார்கள் (நூல்: ரூஹுல் பயான் 1/974 )

கருத்து :

அல்லாஹுத்தஆலா முதன் முதலாக கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தான் படைத்தான் என்பதற்கு பல ஹதீதுகள் ஆதாரமாக இருக்கின்றன.

அல்லாஹ் முதன் முதலில் என்னைத் தான் படைத்தான் என நாயகம் அவர்கள் கூறினார்கள். (நூல்: அல்பானி 1420, ஸுயூதி 911)

தமிழகத்து வலீமார்கள்.

# பல்லக்கு தம்பி வலீ(ரஹ்)

(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.ஸி. ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)

ஒரு சமயம் ஒரு பெண்மணி பல்லக்கு தம்பி வலீயுல்லாஹ் அவர்களை அணுகி தனக்குப் பிள்ளை பாக்கியம் இல்லை யென்றும், தாங்கள் துஆச் செய்ய வேண்டும் என்று மிகவும் அழுது வேண்டிக் கொண்டார். அதைக் கேட்டு மனம் இளகிப் போன வலீயுல்லாஹ் தண்ணீர் ஓதிக் கொடுத்து துஆச் செய்து அனுப்பிவைத்தார்கள். அல்லாஹ்வின் கிருபையால் அப்பெண்மணிக்கு அழகிய ஆண்மகவு ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு பல்லக்கு தம்பி என்றே பெயரிட்டு மகிழ்ந்தார்

ஒரு நாள் ஒருவர் வலிய்யுல்லாஹ் அவர்களிடம் வந்து, எனக்குப் பன்னிரண்டு ஆண்டுகளாகியும் பிள்ளை கிடைக்கவில்லை, தாங்கள்தான் துஆச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அதற்கு வலிய்யுல்லாஹ் அவர்கள் நீர் பெறுவீர்.. நீர் பெறுவீர்.. என்று நல்லாசி வழங்கினார்கள். அவ்வாறே அவருக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதை ஆவலுடன் வாரி அணைத்துக் கொண்டு வலிய்யுல்லாஹ் அவர்களிடம் ஓடி வந்தார் பெரும் களிப்புடன். ஆனால் வலிய்யுல்லாஹ் அவர்களோ அப்பிள்ளையைப் பார்த்தவுடன் அற்பாயுசு அற்பாயுசு என்று உரத்த குரலில் கூறினார்கள். இதை கேட்ட அந்த நபர் செய்வதறியாது அழுதேவிட்டார். அவர்கள்வாக்குப்படி அந்தப் பிள்ளை 10வயதில் இறந்து விட்டது. இருப்பினும் அவர் குலம் தழைக்க மேலும் பல பிள்ளைகள் பிறந்தன. அவர் கவலை பறந்ததோடியது.

ஒருமனிதர் ஒருநாள் இரவு வலிய்யுல்லாஹ் அவர்களைக் கனவில் காண்கிறார். அப்போது அவர்கள் இவரிடம் ஒரு குழந்தையைத் தருகிறார்கள். அது பெண் குழந்தையாக இருந்தது. அப்போது கனவு கண்டவர் நினைக்கிறார். நாம் வலீகளிடம் கேட்டது ஆண் குழந்தை, இவர்கள் பெண் குழந்தையை அல்லவா கொடுக்கிறார்கள். என்று நினைக்கிறார். உடனே வலிய்யுல்லாஹ் அவர்கள் அந்தப் பெண் குழந்தையை அவரிடமிருந்து திரும்ப வாங்கிக் கொண்டு இதோ நீங்கள் என்னிடம் கேட்ட ஆண் குழந்தை என்று சொல்லி அவரிடம் ஓர் அழகிய ஆண் குழந்தையைத் தருகிறார்கள். இது கனவு.

சிலகாலம் கடந்து அந்த நபருக்கு அவர் மனைவி மூலம் ஓர் அழகிய ஆண்மகவு கிடைக்கின்றது. பெற்றோருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. நாம் விரும்பியதைத் தந்துவிட்டார்கள் என்று ஒரே மகிழ்ச்சி. உண்மைதான்

இப்படியெல்லாம் வலீமார்களிடம் கேட்டால் கிடைப்பது என்பது சாத்தியமே. ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. கேட்பவர்களும் அந்த வலீகளிடம் திடமான நன் நம்பிக்கை மட்டும் இருப்பது அவசியத்திலும் அவசியம்.

இதுமட்டுமல்ல, வேறுஎதை நாடி வேண்டினாலும் அவர்களால் இறைவனிடம் வேண்டிப் பெற்றுத் தரமுடியும். அப்படித்தான் ஒருவர் வலிய்யுல்லாஹ் அவர்களே நான் அரசாங்க வேலையில்இருக்கிறேன். எனக்குப் பதவி உயர்வு கிடைக்கவே இல்லை என்றும், தனக்குப் பதவி உயர்வு தரவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். அதற்கு வலீகள், போ உனக்கு பதினைந்தே நாட்களுக்குள் பதவி உயர்வு கிடைக்கும். என்றார்கள். என்ன ஆச்சரியம்? அதே போல் அவருக்குப் பதினைந்து நாட்களுக்குள் பதவி உயர்வு கிடைத்து விட்டது. இறை நேசச் செல்வர்கள் கற்பக விருட்சம் போன்றவர்கள். அவர்களை அண்டி எதைக் கேட்டாலும் அவர்களால் இறையிட மிருந்து பெற்றுத்தர முடியும்.

வலிய்யுல்லாஹ் அவர்கள் கீழக்கரையிலிருந்து வெளியூர் சென்றிருந்த சமயம், கீழக்கரையில் வாழும் பெரு வணிகர் அப்துல் கய்யூம் என்பவரின் சரக்குக் கப்பல் வெளிநாட்டிற்குச் சென்று பலநாட்கள் ஆகி விட்டன. இன்னும் கப்பல் கரை சேரவில்லை என்று மிகுந்த கவலையுடன் வலிய்யுல்லாஹ் அவர்களின் மகனார் செய்யிது முஹம்மது அவர்களிடம், உங்கள் தந்தையாரிடம் இதுபற்றிக் கூறி என் கப்பல் சலாமத்தாக ஊர் திரும்ப வேண்டிக் கொள்ளும் படி கூறினார். அவர்களும் தந்தையாரிடம் இதுபற்றிக் கூற அவர்கள் அதற்கு, அவரது கப்பல் நாகப்பட்டினத்தில் நங்கூரமிட்டது என்று சொன்னார்கள்.

இந்த மகிழ்ச்சியான செய்தியை நண்பர் அப்துல் கய்யூமுக்கு கடிதம் மூலம் அறிவிக்க, அதே சமயம் அவரது கப்பலின் மாலுமியிடமிருந்து ஒருகடிதமும், நம் கப்பல் நாகப்பட்டினத்தில் கரையை கடந்து விட்டது. காரைக்காலில் கரை சேர்ந்தோம் காற்றின் வேகத்தால் நாகப்பட்டினம் வந்து நலமே சேர்ந்து விட்டோம் என்று வந்துவிட்டது.

இரண்டு தபால்களையும் படித்த அந்த கப்பல் உரிமையாளருக்கு மட்டில்லா மகிழ்ச்சி. எப்படி வலீமார்களுக்கு இல்ஹாம் தெய்வீக அறிவிப்பு வருகிறது பாருங்கள். வலீமார்கள் நம் வீட்டிற்கு வருவதால் நமக்கு நம் வீட்டில் உள்ள முஸீபத்துகள் எல்லாம் தானே விலகி ஓடிவிடும்.

வலிய்யுல்லாஹ் அவர்கள் கீழக்கரையிலிருந்து வந்த செய்தி அறிந்து பக்கத்து ஊரான தொண்டியிலிருந்து மக்கள் வந்து வலிய்யுல்லாஹ் அவர்களிடம் தாங்கள் எங்கள் ஊருக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று வேண்டினார்கள்.

தொண்டி, வலிய்யுல்லாஹ் அவர்களுக்கு ஒன்றும் புதிய ஊர் அல்ல. இவர்கள் இளமையில் தொண்டி வந்து அங்குள்ள மாபெரும் மார்க்க மேதை முஹம்மது இஸ்மாயீல் சாஹிபு என்பவர்களிடம் கல்வி பயின்றுள்ளார்கள். அதோடு வலிய்யுல்லாஹ் அவர்களின் தாய் வழிப் பாட்டனார் குதுபுஸ்ஸமான் ஷெய்கு அபூபக்கர் வலீ (ரலி) அவர்கள் அடக்கம் ஆகியுள்ள திருநகரமாகவும் தொண்டி இருந்தது.

மக்களின் வேண்டு கோளின்படி தொண்டி வந்து நேரே தம் பாட்டனார் அவர்களை தரிசிக்கச் சென்று விட்டார்கள். அவர்களுடன் பெருங்கூட்டமும் சென்றது. அங்கு சென்ற அவர்கள் தம் பாட்டனாரைப் புகழ்ந்து அரபியில் பல்லவியாக..

ஆமீன் ஆமீன் பில் அக்தாப்

ஆமீன் ஆமீன் பில் அக்தாப்

ஆமீன் ஆமீன் பில் அக்தாப்

வகுதுபி ஷைகி அபீ பக்ரி

என்பதை மக்களுக்குச் சொல்லி கொடுத்து அதை இவர்களின் கவியில் இடையிடையே சொல்லச் சொன்னார்கள். அந்த மஜ்லிஸே மிகவும் கண்ணியமாகவும் சிறப்பாகவும் இருந்தது.

வலிய்யுல்லாஹ் அவர்கள் தொண்டியில் தங்கியிருந்த சமயம், அவ்வூர் மக்கள் மரியாதை நிமித்தம் வலிய்யுல்லாஹ் அவர்களுக்கு எலுமிச்சை பழங்களையும் கற்கண்டையும் நிறைய கொண்டு வந்து குவித்து விட்டார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருநபர் இந்த காணிக்கைப் பொருட்கள் நம்மைக் கொண்டு அனைவருக்கும் பகிரச் சொன்னால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன் என்று எண்ணினார். வலிய்யுல்லாஹ் அவர்கள் அதே மாதிரி அதே நபரையே அழைத்து, இதையெல்லாம் பகிர்ந்து கொடுங்கள் என்று பணித்தார்கள். அடடா அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை.

கண்டேன் கண்டேன் உண்மை வலீயைக் கண்டன் என்று பாக்களைக் கூறிக்கொண்டே அவற்றைப் பகிர்ந்தளித்தார். (சரிதை தொடரும்)

---

அடிமைச் சங்கிலியை உடைக்கும்போது எதிரியின் கைகள் முறிபடவே செய்யும்

---

# சற்குரு சரித்திரம் 6

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி. ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

நானும் திண்டுக்கல் கலீபா அப்துல் கறீம் அண்ணன் அவர்களும் கண்டி முஸ்லிம் ஹோட்டல் உரிமையாளர்களில் ஒருவரான பாட்சா முதலாளி அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்த போது, எங்களுக்கு கண்டியைச் சுற்றிக் காண்பித்தார்.

அங்கு ஓர் இரவு தங்கி மறுநாள் தான் புறப்பட்டோம். இரவு சரியான குளிர். பொழுது விடிந்தது. டீ வந்தது. பாட்சா முதலாளியே அதை எடுத்து வந்தார். சரி... டீ குடித்து விட்டு குளித்து விட்டு வாருங்கள். காலைச் சிற்றுண்டி சாப்பிடலாம் என்று சொல்லி விட்டுப் போனார். நாங்களும் நல்ல சூடான டீயை அருந்தி விட்டு பாத்ரூம் சென்று தண்ணீர் பைப்பைத் திறந்து கையை நனைத்தால் ஐஸ் தண்ணீர் கொட்டியது. இது உடலில் பட்டால் எப்படி இருக்கும்? மெல்ல அப்துல் கறீம் அண்ணன் அவர்களிடம் வந்து அண்ணே... நீங்கள் முதலில் குளித்து விட்டு வாருங்கள் என்று மரியாதை நிமித்தம் கூறினேன். அவர்கள் பதிலுக்கு சிராஜுத்தீன் நீங்கள் முதலில் குளித்து விட்டு வாருங்கள் என்றார்கள். எல்லாம் குளிர் செய்த வேலைதான்.

என்னடா நமக்கு வந்த சோதனை என்று எண்ணிக் கொண்டு, துண்டு கைலியை எடுத்துக் கொண்டு பாத்ரூமுக்குச் சென்றேன். மேற்கூரை தகரத்தால் போடப்பட்டிருந்தது. காலை மணி 6.30. 7.00 மணி இருக்கும். பார்த்தேன். பாத்ரூம் கதவை மூடி தாழிட்டு விட்டு வாளியில் தண்ணீரைத் திறந்து விட்டேன். அது சட சட என்று கொட்டியது வெளியே அந்த சப்தம் கேட்கும். நானும் வாளித் தண்ணீரை அள்ளி அள்ளி முழங்காலுக்குக் கீழே ஊற்றிக் கொண்டேன். ஒலுச் செய்தேன். தலையை இரண்டு மூன்று தடவை மஸகு செய்து தலையை ஈரமாக்கிக் கொண்டேன். கைலியை மாற்றிக் கொண்டு கட்டியிருந்த கைலியை தண்ணீரில் விட்டுப் பிழிந்து எடுத்து தோளில் ஒய்யாரமாகப் போட்டுக் கொண்டு தலையை துண்டில் துடைத்துக் கொண்டே கதவை திறந்து கொண்டு வெளியே வந்தேன்.

அப்துல் கறீம் அண்ணன் அவர்களுக்கோ ஒரே ஆச்சரியம். எப்படி சிராஜுத்தீன் மேலே தண்ணீரை ஊற்றினீர்கள்? என்று வியந்து போய்க் கேட்டார்கள்.

மூச்சைப் பிடித்துக் கொண்டு அள்ளி அள்ளி மேலே ஊற்றிக் கொண்டேன் அண்ணே என்று சொன்னேன்.

சரி.. நீங்கள் போய் குளித்துவிட்டு வாருங்கள் என்றேன். அதற்குள் வீட்டுக்காரர் இரண்டு தடவை வந்து குளித்து விட்டு வாருங்கள் சாப்பிடலாம் என்று சொல்லி விட்டு போய் விட்டாராம். அண்ணன் அவர்கள்,.. மனிதர் குளிக்காவிட்டால் காலை உணவு தரமாட்டார் போலயிருக்கே... என்று சொல்லிக் கொண்டே அவர்களும் கைலி துண்டை எடுத்துக் கொண்டு பாத்ரூம் சென்றார்கள்.

தண்ணீரை வாளியில் திறந்து விடும் சப்தம் கேட்டது. பிறகு அள்ளி அள்ளி ஊற்றும் சப்தமும் கேட்டது. சரி இவர்களும் நம்மைப் போலத்தான் குளிக்கிறார்கள் போலும் என்று எண்ணி நகைத்துக் கொண்டேன். போன சுருக்கத்தில் கைலியைப் பிழிந்து போட்டுக் கொண்டு வெளியே வந்து விட்டார்கள். ஒருவருக் கொருவர் எதுவும் கேட்டுக்கொள்ள வில்லை.

வீட்டுக்காரர் வந்து விட்டார்கள். குளித்து விட்டீர்களா? என்று கேட்டுக் கொண்டே ஒருமாதிரி உடையை மாற்றிக் கொண்டு சாப்பிடச் சென்று விட்டோம். அதன் பிறகுதான் எங்களை ஊர் சுற்றிப் பார்க்கக் கூட்டிச் சென்றார்.

இந்த விஷயத்தை நமது அருமை ஷெய்கு நாயகம் அவர்களிடம் கண்டியில் குளித்த மாதிரி குளித்து விட்டு வருகிறேன் என்றேன்.

அதென்ன சிராஜுத்தீன் கண்டி குளியல் என்றார்கள். நான் நடந்ததைச் சொன்னேன். அவர்கள் வாய்விட்டுச் சிரித்து விட்டார்கள் அவரும் (அப்துல் கறீம் அண்ணன்) உங்களைப் போல்தான் குளித்து விட்டு வந்திருப்பார் என்று சொல்லி விட்டு மீண்டும் சிரித்தார்கள். என்ன கலகல என்ற சிரிப்பு. இனி எங்கே கேட்பேன்? அதுபோன்ற சிரிப்பை எங்கே பார்ப்பேன்?

ஒரு மாதிரியாக கண்டியிலிருந்து ரயிலில் ஏறி கொழும்பு வந்து, மன்னார் ரயிலில் ஏறி நம்நாடு திரும்பி வந்துவிட்டது தான் எங்களின் கண்டி விஜயம். கண்டி குளியல்.

இதைச் சொல்லச் சொல்லி நமது அருமை ஷெய்கு நாயகம் பலமுறை கேட்டு சிரித்திருக்கிறார்கள்.

நமது அருமை சற்குரு நாயகம் அவர்கள் பணியிலிருக்கும்போதே அவர்களின் உயிருக்கு உயிரான தந்தை நாயகம் (நமது யாஸீன் வாப்பா நாயகம்) அவர்கள் இந்தியா வந்திருந்த சமயம் இயற்கை எய்தி விட்டார்கள்.

இது நமது ஷெய்கு நாயகம் அவர்களை மிகவும் பாதித்தது. வீட்டுப் பொறுப்பை எல்லாம் யாஸீன் வாப்பா நாயகம் அவர்களே பார்த்துக் கொள்வார்கள். இப்பிரிவு அவர்களை பெரிதும் பாதித்ததாகவும் மாமனார் கண்ணியமிக்க ஜக்கரிய்யா ஆலிம்

சாஹிப் அவர்கள் உடன் இருந்தது அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. இறையின் நாட்டம் அவர்களும் அடுத்து மறைந்து விட்டார்கள்.

வயதானவர்கள் உடன் இருப்பது அவர்கள் கண்காணிப்பில் இருப்பது என்பது ஒரு பாக்கியம் தான். இது நிறைய தலைமுறைகளுக்குத் தெரிவதில்லை.

பெரிய மன உளைச்சலுக்குப்பின் நமது ஷெய்கு நாயகம் அவர்களின் குடும்பத்தார் எதார்த்த நிலைக்குத் திரும்பினார்கள். உம்முல் முஃமீன் நமது அருமை வாப்பா நாயகத்தின் தாயார் உடனிருந்தது மனதிற்கு ஒரு ஆறுதல் அளித்தது.

உம்முல் முஃமீன் நமது அருமை வாப்பா நாயகம் அவர்களின் தாயாரைப் பற்றிக் கூறும்போது, திரைமறைவில் அவர்களுடன் நான் பேசும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். அருமை வாப்பா நாயகம் அவர்களிடம் வாப்பா... உம்மாவிடம் பேச இயலுமா? வாப்பா என்று கேட்டேன். இம்... வாங்க என்று கூட்டிச்சென்று திரைமறைவில் நின்று பேசவைத்தார்கள். அப்போது அம்மா சுகமாக இருக்கிறீர்களா? என்றேன். அதற்கு இலங்கை வழக்கப்படி ஓ.... அதன்பின் அவர்கள், என்னிடம் எங்கள் எல்லோரையும் அங்கு (இந்தியாவிற்கு) எடுக்கப்பாருங்கள். அதற்குமுன் நீங்கள் உங்கள் குடும்பத்தோடு இங்கு வாருங்கள் என்றார்கள். இது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியங்களில் ஒன்றாகும்.

அவர்கள் இந்தியா வந்து மறையவே பிரியப்பட்டார்கள் என்பதையே இது காட்டுகிறது. (வருவார்கள்)

---

**இமாம் ஜாஃபர் ஸாதிக் (ரலி) அவர்களின் வாழ்வில்....**

ஒரு முறை இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி) அவர்கள் தங்கள் தோழர்களோடு அமர்ந்திருந்தார்கள், அப்பொழுது தம் தோழர்களைப் பார்த்துக் கூறினார்கள்: அனைவரும் இங்கு வாருங்கள். நாம் ஒருவருக்குப் பின் ஒருவராக உடன்படிக்கை, உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்.. எதற்காக என்று தெரியுமா? நாளை மறுமையில் அல்லாஹ்வின் முன்னிலையில் நம்மில் யாரெல்லாம் வெற்றி பெற்றார்களோ அவர்கள் நம்மில் மீதம் உள்ளவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் பரிந்துரை செய்ய வேண்டும். இதைக் கேட்டு தோழர்கள் கூறினார்கள் அண்ணல் நபியின் அருமைப் பேரரே, உங்களுடைய பாட்டனார் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தான் உலக மக்கள் அனைவருக்குமே பரிந்துரை செய்வார்கள். அப்படி இருக்க எங்களுடைய பரிந்துரை உங்களுக்குத் தேவைப்படுமா? இமாம் ஸாஃபர் சாதிக் (ரலி) அவர்கள் பதில் அளித்தார்கள். என்னிடத்தில் உள்ள இந்த சொற்ப அமலோடு நாளை மறுமையில் என்னுடைய பாட்டனார் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னைப் பார்ப்பதற்கு நான் வெட்கப்படுகிறேன் என்று கூறினார்கள்.

# மாபெரும் மேதையின் இறையச்சம்

ஒருமுறை இமாமுல் அஃலம் அபூ ஹனிஃபா (ரஹ்) அவர்கள் ஒரு பள்ளிக்கு இஷா தொழுகைக்காக சென்றார்கள். அங்கு பள்ளியின் முஅத்தின் சூரத்துல் ஸில்ஸாலை ஓதி இமாமாக நின்று தொழ வைத்துக் கொண்டிருந்தார், அவருக்குப் பின்னால் நின்று இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களும் தொழுது முடித்தார்கள்.

தொழுகை முடிந்ததற்குப் பின்னால் மக்கள் அனைவரும் மஸ்ஜிதை விட்டு வெளியேறி விட்டார்கள் அந்த மஸ்ஜிதில் மீதம் இருந்தது இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களும் அந்த முஅத்தின் மட்டும் தான். அந்த முஅத்தின் கூறுகிறார். இமாம் அபூ ஹனீஃபா அவர்கள் எதையோ பெரிதாக சிந்தித்துக் கொண்டு பெருமூச்சு விட்டவர்களாக அவர்கள் தொழுத இடத்திலேயே அப்படியே அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது நான் எனக்குள் பேசிக் கொண்டேன், இமாம் அவர்கள் இந்த நிலைமையில் என்னிடம் பேசுவதற்கு வாய்ப்பில்லை. அதனால் நாம் இங்கிருந்து சென்று விடுவோம் என்று எண்ணியவனாக நானும் மஸ்ஜிதை விட்டு வெளியேற ஆயத்தமானேன். நான் பள்ளியை விட்டு வெளியேறுகின்ற பொழுது அங்கு வெறும் சிறிதளவே எண்ணெய் உள்ள ஒரு விளக்கை அணைக்காமல் விட்டு சென்றேன்.

நான் வீடு சென்று உறங்கி அதிகாலையில் பஜ்ருடைய நேரத்தில் நான் திரும்ப மஸ்ஜிதுக்கு வந்த பொழுது அந்த விளக்கு அணையாமல் இன்னும் ஒளிமயமாகவே இருந்தது. மேலும் நான் இரவு பள்ளியை விட்டு செல்கின்ற பொழுது இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் இஷா தொழுகை முடித்துவிட்டு எந்த இடத்தில் அமர்ந்திருந்தார்களோ அதே இடத்தில் கொஞ்சமும் மாறாமல் அப்படியே அமர்ந்திருந்தார்கள், மேலும் இமாம் அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். சூரா ஸில்ஸாலில் வருகின்ற இறுதி வசனங்களை ஓதிக்கொண்டு அதோடு சேர்த்து யா அல்லாஹ்! அணு அளவு நன்மை செய்தாலும் அதற்கான கூலியை தருபவனே, யா அல்லாஹ்! அணு அளவு தீமை செய்தாலும் அதற்கான கூலியையும் தருபவனே! நரகத்தை விட்டு என்னைப் பாதுகாப்பாயாக! உன்னுடைய நரகத்தை விட்டு என்னைப் பாதுகாப்பாயாக! உன்னுடைய விசாலமான கருணையில் என்னை நுழைத்தருள்வாாக! என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

■ உன்னைச் செதுக்க உளி தேவையில்லை. பலரது அவமானங்களும் சிலரது துரோகங்களும் போதும்.

■ பயணத்தைக் காலம் முடிவு செய்யலாம். பாதையை தீர்மானிப்பது நீயாக இரு.

திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன்
அரபிக் கல்லூரி நடத்திய,

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34 ஆம் தலைமுறைத் திருப்பேரர்

குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித்

**கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல்**

ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின்

## 40 ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல்

## 12ஆவது யாஸீனிய் ஆலிம் பட்டமளிப்பு விழா!

## முதலாவது ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா! 5

நிகழ்ச்சித் தொகுப்பாளர் மௌலவி V.M. **முஹம்மது ஹஸன் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள்:

அடுத்து நாம் சொற்பொழிவாற்ற அழைக்க இருப்பவர்கள், பார்ப்பதற்கு எளிமையானவர்கள், பழகுவதற்கு இனிமையானவர்கள், பணிவுக்கு உதாரணமானவர்கள், நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அன்புக்கு உரித்தானவர்கள், இவர்கள் சத்தியத்தைச் சமரசம் இல்லாமல் பேசுவார்கள். அசத்தியத்தை சமயோஜிதத்தோடு போக்குவார்கள். அத்தகைய **கண்ணியத்திற்குரிய அல்ஹாஃபிழ் அல்ஹாஜ். அபுத்தலாயில், அபுல் பயான் அஸதுல்லாஹ் டாக்டர். எம். ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி எம்.ஏ. பி.எச்.டி. ஹள்ரத்** அவர்களைச் சிறப்புரை நிகழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்... என்று அழைத்திட,

**கண்ணியத்திற்குரிய அல்ஹாஃபிழ் அல்ஹாஜ். அபுத்தலாயில், அபுல் பயான் அஸதுல்லாஹ் டாக்டர். எம். ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி எம்.ஏ. பி.எச்.டி. ஹள்ரத் அவர்கள் :**

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்கதாத்துஹு.

மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி நடத்துகின்ற முப்பெரும்விழா. அல் ஆரிஃபுபில்லாஹ் அஷ்ஷைகுல் காமில் அல்லாமா ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்

அவர்களின் 40 ஆம் நாள் ஃபாத்திஹா நினைவேந்தல், 12 ஆவது யாஸீனிய் ஆலிம் பட்டமளிப்பு விழா, முதலாவது ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா ஆகிய முப்பெரும் விழாவின் தகுதிமிக்கத் தலைவர் சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் தாமத் பரக்காத்துஹுல் ஆலியா ஹள்ரத் பெருந்தகை அவர்களே, இந்நிகழ்விற்கு வருகை புரிந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, நம் உயிரினும் மேலான கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதக் குடும்பத்தைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய மௌலானாமார்களே, ஸய்யிது ஸாதாத்மார்களே, மரியாதைக்குரிய உலமாப் பெருமக்களே, அன்பார்ந்த பெரியோர்களே, இளைஞர்களே, சிறார்களே, தாய்மார்களே, சகோதரிகளே, இக்கல்லூரியின் போற்றுதலுக்குரிய நிர்வாகப் பெருமக்களே, பட்டம் பெறவிருக்கிற சமூகத்தின் விடிவெள்ளிகளாக இருக்கின்ற இளம் உலமாப் பெருமக்களே, அருள்மறை வேதம் குர்ஆன் ஷரீஃபைத் தங்கள் இதயத்தில் சுமந்திருக்கும் பாக்கியம் பெற்றிருக்கின்ற மரியாதைக்குரிய ஹாஃபிழ்களே,

புனிதமான நிகழ்வு இது. நம்மையெல்லாம் பங்கெடுக்கச் செய்து நல்லதைச் சொல்லவும் கேட்கவும் வாய்ப்பளித்த எல்லாம் வல்ல இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

உலக மொழிகளில் வணிக மொழி ஆங்கிலம். உலக மொழிகளில் கவிதை மொழி உருது. உலக மொழிகளில் தாய்மொழி, நம் தமிழ். உலக மொழிகளில் சுவர்க்கத்து மொழி, அறபி. அந்தச் சுவனத்து மொழியிலே – கல்வி ஞானத்தைப் பெறும் பாக்கியம் அடைந்தவர்கள் தாம் இந்த இளம் மௌலவிமார்கள். எந்த மொழியிலே அருள்மறை குர்ஆன் இறங்கியதோ, அந்த அறபி மொழியிலே கல்வி ஞானத்தைப் பெற்றவர்கள், இந்த இளம் மௌலவிகள். நம் உயிரினும் மேலான கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்த மொழியில் பேசினார்களோ அந்த அறபி மொழியிலே கல்வி ஞானத்தைக் கற்றவர்கள், இந்த இளம் மௌலவிமார்கள். இவர்கள் கொடுப்பினை பெற்றவர்கள். காரணம், இவர்கள் சாமானியர்கள் அல்ல, சாதனையாளர்கள். இவர்களுடைய கண்கள் புனிதம் பெற்றவை. இவர்களுடைய கைகளும் புனிதம் பெற்றவை. மற்றவர்களுடைய கைகளில் தினசரி பத்திரிகைகளும், வார இதழ்களும், மாத இதழ்களும் தவழ்ந்த நேரத்திலே, இந்த இளம் மௌலவிமார்களின் கைகளிலே குர்ஆன் தவழ்ந்தது. தஃப்ஸீர் கிதாபுகளைச் சுமந்திருந்தார்கள். ஹதீது கிதாபுகளைச் சுமந்திருந்தார்கள். இவர்களுடைய கைகள் புனிதம் நிறைந்தவை. மற்றவர்களுடைய கண்களெல்லாம் தினசரி, வார இதழ்களையும் மாத இதழ்களையும் படித்துக் கொண்டிருந்த நேரத்திலே, இவர்கள் தங்கள் கண்களால்

குர்ஆனைப் படித்துக் கொண்டிருந்தார்கள். தஃப்ஸீரைப் படித்துக் கொண்டிருந்தார்கள். ஹதீது கிரந்தங்களை வாசித்துக் கொண்டிருந்தார்கள். இவர்களது கண்கள் புனிதமானவை. ஆகவே, இந்த இளம் மௌலவிமார்கள் சாமானியர்கள் அல்லர், சாதனையாளர்கள். இந்த இளம் சாதனையாளர்கள் இதுவரை ஏடு தூக்கும் கைகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். இனிமேல் நாடு காக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்களாக ஆகப் போகிறார்கள். இந்த இளம் மௌலவிமார்கள் இதுவரை வரலாறு படித்தார்கள். இனிமேல் வரலாறு படைக்கப் போகிறார்கள். வரலாறு படிக்காத எவரும் வரலாறு படைக்க முடியாது. இவர்கள் இங்கிருந்த நேரத்தில் எத்தனை சரித்திரங்கள் படித்திருக்கிறார்கள். இனிமேல் இவர்கள் சரித்திரமாக மாறப் போகிறார்கள். அதுதான் உண்மை.

ஆகவே, இவர்கள் கொடுப்பினை பெற்றவர்கள் என்பது மட்டுமல்ல, இவர்களது பெற்றோரும் கொடுப்பினை பெற்றவர்கள். பிள்ளை பெற்றால் என்ன பலன்? பிள்ளை பேரெடுத்தால் பெற்ற பலன் என்பார்கள். இந்த மௌலவிமார்களெல்லாம் பேரெடுத்திருக்கிறார்கள். ஆகவே இவர்களது பெற்றோர்கள் பெற்ற பலனைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் சாமானியர்கள் அல்ல, சாதனையாளர்களாக இருக்கின்றார்கள்.

கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்பார்கள். அதற்குமேலும் ஒன்றிருக்கிறது, கல்விக்கு அழகு கசடற வாழுதல். இந்த இரண்டையும் சொல்லிக் கொடுக்கும் கல்விக்கூடங்கள், இதுபோன்ற மதுரஸாக்கள். எப்படி எழுதுவது என்று சொல்லிக் கொடுப்பது மட்டும் கல்வி அல்ல, எப்படி வாழ்வது என்று சொல்லித் தருவதும் கல்விதான். அந்த அழகிய கல்வியைப் போதிப்பது தான் இந்த மதுரஸதுல் ஹஸனைன். அந்த வகையில் இவர்கள் கொடுப்பினை பெற்றவர்கள். இன்னொரு விசயத்தையும் இந்தக் கூட்டத்தில் கூறுவதற்கு விரும்புகின்றேன்.

இறைவனின் அருளால், நம் உயிரினும் மேலான அஷ்ஷைகு ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் எழுதிய பேரின்பப் பாதை என்கிற நூலின் ஆங்கில மொழியாக்கம் இன்ஷா அல்லாஹ் இங்கே வெளியிடப்பட இருக்கின்றது. இந்த நூலிலே எவ்வளவு பெரிய உயர்ந்த கருத்துகள், சிறந்த முத்துகளெல்லாம் பொதிந்து கிடக்கின்றன?! அவற்றில் ஒருசில கருத்துகளை மட்டும் நான் உங்களுக்கு இங்கே கூற விரும்புகின்றேன்.

முதலாவதாக, ஞான குருவின் அவசியம். திருக்குர்ஆன் ஷரீஃபிலே எத்தனையோ வசனங்களை அல்லாஹுதஆலா சொல்லிக் காட்டுகின்றான். அந்த வசனங்களையெல்லாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் ஞான குரு அவசியம்.

உதாரணத்திற்குச் சொல்வதென்றால், திருக்குர்ஆன் ஷரீஃபில் இறைவன் சொல்கின்றான் :

**ஃஅய்னமா துவல்லூ ஃபஸம்ம வஜ்ஹுல்லாஹ்...**

நீங்கள் எங்கு நோக்கினும், அங்கே அல்லாஹ் இருக்கின்றான் என்பதாக இறைவன் கூறுகின்றான். இதனை எப்படிப் புரிந்து கொள்வது?

**வஹுவ மஅகும் அய்ன மா குன்தும்**

நீங்கள் எங்கிருந்தாலும் இறைவன் உங்களுடன் தான் இருக்கின்றான், என்பதாக இறைவன் கூறுகின்றான். இதனை எப்படி விளங்கிக் கொள்வது?

**நஹ்ன அக்ரபு இலைஹி மின் ஹப்லில் வரீத்**

நாம் மனிதனுடைய உயிர்நாடி நரம்பைவிட அருகிலே இருக்கின்றோம் என்பதாக இறைவன் சொல்கின்றானே, இவற்றை நாம் எப்படி அறிவது?

ஒரு ஞான குரு இல்லையானால் இந்த வசனங்களின் பொருள் நமக்குத் தெரியாது. அது நமக்கு மிகப்பெரிய இழப்பு என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், இந்தத் திருக்குர்ஆன் வசனங்கள் எல்லாம் அப்படி அப்படியே இருக்க, அவற்றைப் புரியாமல் ஓதிக் கொண்டே இருந்து விட்டு இந்த உலகத்தை விட்டுப் போகிறோம் என்றால், அது எவ்வளவு பெரிய இழப்பு? இறைவன் திருக்குர்ஆன் வசனங்களை நமக்குத் தந்ததே, புரிவதற்குத்தானே?! இந்தத் திருக்குர்ஆன் வசனங்கள் இருந்தது, நான் ஓதினேன், ஆனால், புரியவில்லை.

நான் மௌத்தாகி விட்டேன் என்று ஒருவர் சொன்னால், எவ்வளவு பெரிய நஷ்டம் இது! அதனால் தான் ஞான குரு அவசியம் என்கிறார்கள்.

ஏனென்றால், கல்வி என்பது இரண்டு வகைப்படுகிறது. அதில் ஒன்று, தாளைப் படித்துப் பெறக்கூடிய கல்வி. இன்னொன்று, ஆளைப் பிடித்துப் பெறக்கூடிய கல்வி. தாளைப் படித்துப் பெறக்கூடிய கல்வி பற்றி நமக்கெல்லாம் தெரியும். ஆளைப் பிடித்துப் பெறக்கூடிய கல்வி, அதுதான் ஞானக் கல்வி. அத்தகைய ஆள் தான், அந்த ஞான ஆசிரியர் தாம், அஷ்ஷைகு எனப்படுபவர்கள். இருட்டில் இருக்கின்றோம், ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டும். நமக்கு ஒரு விளக்கு தேவை. அந்த விளக்குதான் ஞான குரு. குழந்தை நடைபயில்வதற்கு ஒரு சாதனம் தேவைப்படுகிறது. அந்த சாதனம் தான் ஞான குரு. அதனால் தான் தக்கலை பீரப்பா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்வார்கள் : **அறிவை அறிந்தவர் ஆயிரத்தில் ஒருவர், அருளை அறிந்தவர் இலட்சத்தில் ஒருவர், குருவை அறிந்தவர், கோடியில் ஒருவர், கருவை அறிந்தவர் காண்பதும்**

**அரிது** என்பார்கள். அப்படிப்பட்ட ஞானகுரு ஒவ்வொருவருக்கும் அவசியம் என்பதாக சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள். இந்த நூலில் 25ஆவது பக்கத்திலே ஒரு செய்தியைச் சொல்கிறார்கள்.

**இந்த உலகத்தில் சில பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஷைகு மாதிரி வேடம் போடுவார்கள். ஆடைகள் தரிப்பார்கள். ஆனால், அவர்களிடம் அந்த ஞானம் இருக்காது. அவர்களை நம்பிப் போய் பலபேர் ஏமாந்தும் போய்விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள். மனிதர்கள் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்** என்பதாகவும் சொல்லிக் காட்டுகிறார்கள்.

**தம்மை ஞானாசிரியர் எனப்பகர்ந்து போலிவேடம் போட்டு உடையாலும் பேச்சாலும் நடையாலும் செயலாலும் மக்களைத் தன் பகட்டில் ஈர்த்து ஏய்க்கும் ஞானமே கற்காத வேடதாரிகள்** என்பதாகவும் அவர்களைப் பற்றிச் சொல்கிறார்கள். அவர்களிடம் ஞானமே இருக்காது. வெறும் வேடதாரிகள். அதைத்தான் சங்கைக்குரிய **நாகூர் பாதுஷா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு** அவர்களும் சுட்டிக் காட்டுகிறார்கள்: **ஞானம் என்பது நீண்ட அங்கியிலும் பெரிய பெரிய தஸ்பீஹ் மணியிலும் கிடையாது. உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதன் மூலம் ஏற்படுகின்ற உதிப்புதான் ஞானம்** என்கிறார்கள்.

ஞானம் என்றால் என்ன? நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்கே செல்லப் போகிறோம்? நம்மைப் படைத்த ரப்பு யார்? இதைத் தெரிந்து கொண்டால், அதுதான் ஞானம். விதை இருக்கின்றது; நிலமும் இருக்கின்றது; நீரும் இருக்கின்றது என்றால் பிரச்சனை இல்லை. ஆனால், நிலம் இருக்கின்றது, நீர் இருக்கின்றது, விதை இல்லையென்றால்...? அந்த நிலம் இருந்து என்ன பிரயோசனம்? அந்த நீர் இருந்து என்ன பயன்? உடல் இருக்கின்றது, உயிர் இருக்கின்றது. ஆனால், மஃரிஃபாவுடைய ஞானம் இல்லையென்றால் உடல் இருந்து என்ன பலன்? உயிர் இருந்து என்ன பலன்? என்பதாகக் கேட்கிறார்கள், **சங்கைக்குரிய நாகூர் பாதுஷா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.**

சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள், கராமத்துகள் பற்றி முன்னர் பேசியவர்கள் கூறினார்களல்லவா? கராமத் என்பது அற்புதங்களை வெளிப்படுத்துவது மட்டுமல்ல. ஞானமகான்களுக்கு அது முக்கியமே இல்லை. இதைத்தான் சங்கைக்குரிய நாகூர் பாதுஷா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: **ஒருவர் ஆகாயத்திலே பறந்து**

**போகிறார், கடல் மீது நடந்து போகிறார் என்றால், இதுவெல்லாம் பிறவிப்பயன் அல்ல. மஃரிஃபாவுடைய ஞானத்தை ஒருவன் பெற்றுவிட்டால், அவன் பிறவிப்பயனை அடைந்து கொள்கிறான்** என்கிறார்கள்.

அதைப்போலத்தான் சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் இந்த பேரின்பப்பாதை நூலில் கூறுகிறார்கள்:

**இத்தகையவன் பல்லாயிரக்கணக்கான கல்வி நூல்களை மனனஞ் செய்தபோதும் செய்கு ஒருவரின்றி (மேற்கூறிய பாப செயல்களான நோய்கள்) சுகமடைந்து நேர்வழி பெறமாட்டான். வைத்திய நூல் பலவற்றை மனனஞ் செய்தும் நோயாளியின் நோய்களை நீக்க முடியாத வைத்தியனைப் போன்றவன் அவன் என்று ஹதீகதுன்னதிய்யா எனும் நூலில் வருகிறது...** என்பதாகச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ஒரு மனிதன் ஆயிரம் வைத்திய நூல்களைப் படித்துவிட்டான், அவன் வைத்தியம் பார்க்க முடியுமா? பயிற்சி பெறாமல் வைத்தியம் பார்க்க முடியுமா? மற்றவர்களின் உயிருக்கல்லவா அஃது ஆபத்து? ஒருவர் ஒன்றைப் படித்ததாலேயே அதில் அவர் சிறந்தவர் என்று கூறிவிட முடியாது. தமிழில் கூறுவார்களே, நான்மறையைக் கற்றவனா ஞானி? இல்லை, தன்னுள் நான்மறையக் கற்றுக் கொண்டவனே ஞானி! என்பார்கள். நான்கு வேதங்களை மனனஞ் செய்து கரைத்துக் குடித்து விட்டால், அவன் ஞானி கிடையாது. அதைத்தான், சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள் : ஆயிரம் வைத்திய நூல்கள் மனனஞ் செய்துவிட்டால் மட்டும் அவன் வைத்தியன் அல்ல என்கிறார்கள். ஏனென்றால், ஏட்டுச் சுரக்காய் கரிக்கு உதவாது என்ற பழமொழியை நாமெல்லாம் கேள்விப் பட்டிருக்கின்றோமே!

கார் ஓட்டுவது எப்படி என்று ஒரு புத்தகத்தை ஒருவன் வாங்கி வந்து அதனைப் படித்துவிட்டு, தான் கார் ஓட்டப் போகிறேன் என்றால், ஒப்புக் கொள்வோமா? ஆபரேசன் செய்வது எப்படி? என்று ஒரு புத்தகத்தை வாங்கி வந்து, அதனை படித்துவிட்டு, கத்தியைத் தூக்கிக் கொண்டு ஆபரேஷன் செய்யச் செல்கிறேன் என்றால் ஏற்றுக் கொள்ள முடியுமா? எத்தனை உயிர்களுக்கு ஆபத்து அது?! அதனால், மஃரிஃபா என்னும் ஞானக்கல்வியை ஷைகுமார்களிடம் பயிற்சி பெறுவதன் மூலமாகத்தான் பெற்றுக் கொள்ள முடியும். தானாக நூல்களை யெல்லாம் படித்துவிட்டு, நான் ஞானக் கல்வியைப் பெற்றுக் கொண்டேன் என்றால், அதை ஒப்புக் கொள்ள முடியாது. ஆளைப் பிடித்துப் பெறக்கூடிய கல்வி இது. ஞான குருவை அண்டித்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதனை சங்கைக்குரிய

வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிறார்கள். அதேபோன்று, இன்னும் முக்கியமான விஷயத்தையும் இந்த பேரின்பப்பாதை நூலில் சொல்லிக் காட்டுகிறார்கள்.

**உலகத்தோடொட்ட வாழ்ந்த போதும், உலகாசை நீக்கி இறையில் லயித்தல் துறவிற் சிறந்த துறவாகும். சேற்று மீன் சேற்றுனுள்ளிருந்தாலும் அதன் மேற் சேறுபடியாது. நீரின் மேலிருக்கும் தாமரையிலைமேல் நீர் படியாது. ஓடும் புளியம் பழமும் ஒன்றாயிருப்பினும் நெருங்கிய தொடர்பிராது. இத்தகைய உதாரணங்கள் உண்மைத் துறவு என்பது யாது என விளங்கும்.**

தாமரை இலையும் நீரும்போல எனச்சொல்வதை நாம் கேள்விப்பட்டிருப்போம். இந்த இடத்தில், சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் இன்னொரு புதிய உதாரணத்தை இங்கே சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். ஓடும் புளியம் பழமும் ஒன்றாயிருப்பினும் நெருங்கிய தொடர்பிராது என்கிறார்கள். நாமெல்லாம் புளியம்பழம் பார்த்திருக்கின்றோம். மேலே ஓடு இருக்கும். உள்ளே பழமிருக்கும். உள்ளிருக்கும் பழம் ஓடோடு ஒட்டியிருக்காது. காயாக இருக்கும்போதுதான் ஓடோடு ஒட்டியிருக்கும். பழமாகிவிட்டால் அந்தப்பழம் பிரிந்து ஒட்டாமல் இருக்கும். ஓடு மட்டும் தனியாக இருக்கும். நல்லவர்கள் எல்லாம் அப்படித்தான் இருப்பார்கள். உலகத்தில் இருப்பார்கள், ஆனால், உலகத்தோடு ஒட்டாமல் இருப்பார்கள்... என்பதாக ஞானமகான்களின் நிலைப்பாட்டை அழகான உதாரணத்தோடு குறிப்பிடுகின்றார்கள், சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள்.

உலகத்தில் நாம் இருப்பது தவறல்ல. உலகம் நம்மிடம் வந்து விடுவது தான் ஆபத்து. தண்ணீரில் படகு இருக்கலாம், தவறில்லை. படகுக்குள் தண்ணீர் புகுந்துவிடக்கூடாது. அதுதான் ஆபத்து. காரில் நாம் ஏறலாம், அது தவறே இல்லை. ஆனால், கார் நம்மீது ஏறிவிடக்கூடாது. அதுதான் ஆபத்து. அதனாற்றான் இறைநேசர்கள் சொல்வார்கள் : எதை எதை எங்கெங்கு வைக்க வேண்டுமோ, அதை அதை ஆங்காங்கே வையுங்கள் என்பார்கள். உங்களிடம் கார் இருக்கின்றதா? பார்க்கிங்கில் நிறுத்துங்கள். உங்களிடம் நகைகள் இருக்கின்றனவா? பீரோவில் வையுங்கள். உங்களிடம் பணம் இருக்கின்றதா? பர்ஸில் வையுங்கள். உங்கள் மனைவி-மக்கள், உங்கள் மடியில் வையுங்கள். ஆனால், உங்கள் உள்ளத்திலே அல்லாஹ்வை மட்டும் வையுங்கள், என்கிறார்கள் இறைநேசர்கள். கடல்நீர் முழுக்க உப்புதானே? கடலிலிருந்து தானே மீனைப் பிடித்து வருகிறோம்? அந்த மீனைச் சமைக்கும்போது, அந்த மீன் இவ்வளவு காலம் கடலில்

தானே இருந்தது? உப்புநீரில் தானே இருந்தது? அதனால் அந்த மீனைச் சமைக்கும்போது உப்பைச் சேர்த்துவிட வேண்டாம், அதை ஏற்றுக் கொள்ள முடியுமா? அந்த மீன் சுவைக்குமா? அந்த மீன் கடலில் தான் காலம் முழுக்க இருந்தது. ஆனால், அதனுடன் உப்பு சேரவே இல்லை. அதைப்போலத்தான் நாம் இந்த உலகத்தில் இருக்க வேண்டும். ஆனால், இந்த உலக ஆசை ஒட்டாமல் இருக்க வேண்டும்.

இதனை அருமையான உதாரணங்களுடன் எடுத்துரைக்கும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள், இன்னொரு விஷயத்தை கொஞ்சம் வேதனையோடு எடுத்துரைக்கின்றார்கள். ஏனென்றால், இன்றைக்குச் சிலபேர் இறைநேசர்களுக்கு எதிராகத் திரும்பிக் கொண்டிருக்கின் றார்கள். இந்த நேரத்தில் நாம் நம்மைப் பற்றிக் கவலைப்படவில்லை. இப்படி இறைநேசர்களுக்கு எதிராகத் திரும்பியிருக்கின்றார்களே, அவர்களைப் பற்றித்தான் பச்சாதாபப்படுகிறோம். அவர்களைப் பற்றித்தான் நாம் பரிதாபப் படுகின்றோம். அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று நாம் யோசிக்கின்றோம். அவர்களுக்கும் நல்வழி கிடைக்கட்டுமாக. (ஆமீன்). இது விஷயமாக, பேரின்பப்பாதை நூலில் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் அழகாக ஒரு பைத்தைக் கொண்டு வருகிறார்கள்.

**யா நாதிஹல் ஜபலில் ஆலி லியுக்லிமஹு**

**இர்ஹம் அலர் ரஃஸி லா தர்ஹம் அலல் ஜபலி**

... என்கிறார்கள். ஓர் ஆள் மலைக்குச் சென்றான். அந்த மலைமீது கோபம் உண்டானது. அதனால் அந்த மலைக்கு காயத்தை ஏற்படுத்தவேண்டி, அந்த மலையைத் தன் தலையால் முட்டுகின்றான். இப்படியா இருக்கிறாய், மலையே! உன்னை வேதனை செய்கிறேன் என்று சொல்லி தன் தலையைக் கொண்டு மலையை முட்டுகின்றான். அப்படிப்பட்டவனைக் கூப்பிட்டு, இந்த பைத்தைப் பாடிய இறைநேசர் கூறுகிறார்கள், அந்த மலைக்கா நீ நோவினை கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றாய்? நீ உன் தலைமீது இரக்கங்கொள். பரிதாபப்படு. அந்த மலையைப் பற்றிக் கவலைப்படாதே. உனக்குத்தான் நஷ்டம். ஏனென்றால், நீ மலையோடு மோதுகின்றாய். உன் தலைக்குத்தான் காயம் ஏற்படும். இழப்பு உனக்குத்தான்... என்று பாடுகிறார்கள்.

இன்றைக்கும் அப்படித்தான். இறைநேசர்களைச் சிலர் எதிர்த்து நிற்கிறார்களே, அவர்களது நிலையும் இப்படித்தான். அவர்கள், இறைநேசர்களை யாரென்று புரியாமல் எதிர்க்கின்றார்கள். இறைநேசர்களின் அருமை இவர்களுக்குத் தெரியவில்லை. பூவின் மணத்தைப் பற்றி நாசியில்லாத வனிடத்தில் கேட்டால் என்ன

பயன்? சூரிய ஒளியைப் பற்றி, கண் தெரியாத குருடனிடம் சென்று கேட்டால் என்ன பயன்? அவ்வாறே, இன்றைக்கு இறைநேசர்களின் மகத்துவம் புரியாதவர்கள் தாம் இத்தகைய இழிசெயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், இவர்களுக்கு நாம் சொல்லிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். இறைநேசர்கள் கம்பளி உடையால் தங்கள் உடலை மட்டும் மறைத்துக் கொள்ளவில்லை. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தங்கள் இதயத்திற்குள்ளே இறைவனையும் மறைத்து வைத்திருக்கின்றார்கள். அதனால், அவர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களின் உள்ளத்தினுள்ளே இறைவன் இருக்கின்றான். அதனால்தானே, அல்லாஹ் ஹதீஸே குத்ஸியில் சொல்கின்றான்.

**மன் ஆதா வலிய்யன் ஃபகத் ஆதன்து பில் ஹர்ப்**

என் நேசர்களை யார் பகைத்துக் கொண்டால், என்னுடன் போருக்குத் தயாராகிவிட்டீர்கள் என்பதாக இறைவன் அறிவிக்கின்றானே! புஹாரீ ஷரீஃபில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதல்லவா? அல்லாஹ்வுடன் யாரும் சண்டை போட முடியுமா? இறைநேசர்களை எதிர்ப்பது எவ்வளவு பெரிய கொடும்பாபம் என்றால், இறைவன் தன்னோடு சண்டைக்கு வா என்று அழைப்பான்? என் நேசர்களோடு சண்டை போடுகிறாயா...? என்னிடம் சண்டைக்கு வா என்று அழைக்கின்றானே?!

இதனைத்தான் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் கூறுகிறார்கள். இறைநேசர்களோடு மோதுவது உனக்குத்தான் நஷ்டம் என்கிறார்கள். ஏனென்றால், நீ மலைமீது மோதுகின்றாய். காயமும் இழப்பும் உனக்குத்தான் என்பதாக அருமையாக விளக்குகின்றார்கள். நிறைவாக, எனது பேச்சில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு ஞானத்தந்தையை எவ்வாறு மதிக்க வேண்டும்? என்பதை நமக்கு வழிகாட்டுகிறார்கள், சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள்.

**தன் தாய் தந்தையரை எவ்வாறு ஒருமகன் உளமார உகப்பானோ அதைவிடத் தன் ஆத்மத் தந்தையான ஞானகுருவை எத்தருணத்தும் உகக்கும் குணங்கொள்ளல் வேண்டும்** என்பதாக ஒரு முரீதின் இலட்சணமாக எடுத்துரைக்கின்றார்கள்.

மனிதன் ஒருவன் தன் சொந்தத் தாய் தந்தையை எப்படி உகப்புக் கொள்வான்? உண்மையான முறையில் தானே? அதைவிட இன்னும் மேலே, பெற்ற தாய் தந்தையைவிட ஞானத்தந்தையை அதிகம் நேசிக்க வேண்டும். இந்த உலகத்திலே

நம்மைத் தந்தார், ஆகவே அவர் தந்தை. இன்னொருவர் ஞானத்தந்தை. இறைவனின் ஞானத்தை நமக்குத் தந்தவர் ஞானத்தந்தை. இந்த ஞானத்தந்தை, பெற்ற தந்தையைவிட உயர்ந்து நிற்கிறார், ஏன் தெரியுமா? நம்முடைய அழியும் உடலை இந்த உலகத்திற்குத் தந்தவர் தான் நம்மைப் பெற்ற தந்தை. நம்முடைய அழியும் உடலை அழியாத உடலாக மாற்றித்தருபவர் ஞானத்தந்தை. ஆகவே தான் பெற்ற தந்தையைவிட ஞானத்தந்தை சிறந்தவர். அவரை அதிகம் உகக்க வேண்டும் என்பதை இங்கே சொல்லிக் காட்டுகின்றார்கள்.

இந்தப் புத்தகத்தில், இன்னொரு விசேசமும் இருக்கின்றது. இந்த இறைஞானத்தைப் பற்றி சித்தர்கள் எல்லாம் பல விசயங்கள் பகர்ந்திருக்கின்றார்களே, அவற்றையெல்லாம் நமக்குக் குறிப்புக்காகப் பொருத்தமான இடங்களில் தொகுத்து, இந்தப் பேரின்பப்பாதை நூலில் வழங்கியிருக்கின்றார்கள்.

சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம் அவர்கள் சொல்லிக் காட்டுகிறார்கள். **ஏகத்துவ ஞானம் அனைவருக்கும் பொதுவாதலால் இந்து, முஸ்லிம், கிருத்துவ ஞானிகளின் கருத்துகளும் ஆங்காங்கே இடைக்கிடை இதிற்கொடுக்கப்பட்டுள்ளன. அனைவரும் கற்றுப் பயன் பெறுவார்களாக...** என்பதாகச் சொல்கிறார்கள்.

ஆகவே, அவ்வாறு இறைஞானத்தை எடுத்தியம்பும் பல்வேறு கருத்துகளைப் பொதிந்த நூலாக, சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம் அவர்கள் இயற்றிய பேரின்பப்பாதை நூல் திகழ்கிறது.

மாற்றுமத அறிஞர்களின் கருத்துகளை இங்கே எப்படி எடுத்து வரலாம் என்பதாகச் சிலர் தர்க்கம் பேசுவார்கள்தானே?! அப்படிப் பேசுபவர்கள் நிறைய விசயங்களை அப்படித்தான் பிறரிடமிருந்து எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு, இறைஞானம் தொடர்பான விசயங்களைப் பிற அறிஞர்களிடமிருந்து எடுத்துவந்து சொன்னால் மட்டும் கோபம் கொப்பளிக்கும்.

உதாரணமாக, **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்....** என்று திருவள்ளுவர் சொல்லுவதை, எல்லாத் தலைவர்களும் மேற்கோள் காட்டப் பயன்படுத்துகிறார்கள் தானே?இதுவும் அடுத்தவர் சொன்ன செய்திதானே?! **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்று கணியன் பூங்குன்றனார் சொன்னதை, இப்படித் தர்க்கம் செய்பவர்களும் பயன்படுத்துகிறார்களா? இல்லையா? நல்ல கருத்து, எங்கிருந்தால் என்ன? ஞானம் என்பது ஒரு முஃமினுடைய காணாமல் போன பொருள். எங்கிருந்து கிடைத்தாலும் எடுத்துக் கொள்ளலாம். அதேமாதிரி, இறைவனுடைய ஞானத்தைப் பற்றிய செய்திகள் எங்கெல்லாம் சொல்லப்

படுகின்றதோ அவற்றையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹுஸிர்ரஹுல் அழீம் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.

அவற்றில், முக்கியமானவர் தான், நாமெல்லாம் கேள்விப்பட்ட **குதம்பைச் சித்தர்.** அவர் மஃரிபாவுடைய ஞானக்கருத்தைப் பாடுகிறார்:

**தன்னை யறிந்து**

**தலைவனைச் சேர்ந்தோருக்கு**

**பெண்ணாசை ஏதுக்கடி – குதம்பாய்**

**பெண்ணாசை ஏதுக்கடி** .... என்கிறார்.

ஏனென்றால், இவர்தான் தன்னை அறிந்து தன் தலைவனான அல்லாஹ்வுடன் சேர்ந்துவிட்டாரே அவருக்குப் பெண்ணாசை போன்ற உலகத்து ஆசைகளெல்லாம் இருக்கும் என்கிறார். அவரே தொடர்ந்து,

**வெட்டவெளி தன்னை**

**மெய்யென்றிருப்பாருக்குப்**

**பட்டய மேதுக்கடி – குதம்பாய்**

**பட்டய மேதுக்கடி...** என்கிறார், குதம்பைச் சித்தர்.

அதேபோன்று, நாம் நீ மரணிப்பதற்கு முன் மரணித்துவிடு என்று சொல்வோமே, அதையே குதம்பைச் சித்தர் இப்படிச் சொல்கிறார்:

**செத்தாரைப் போலத் திரியும்**

**மெய்ஞ்ஞானிக்கு**

**கைத்தாள மேதுக்கடி – குதம்பாய்**

**கைத்தாள மேதுக்கடி...**

**கைத்தாள மேதுக்கடி...**

என்கிறார், குதம்பைச் சித்தர்.

... இப்படியான அற்புதமான ஞானக்கருத்துகளை உள்ளடக்கியதுதான் இந்தப் பேரின்பப்பாதை என்னும் நூலாகும். இதனுடைய ஆங்கில மொழியாக்கம், இறையருளால் இவ்விழாவில் வெளியாகவிருக்கின்றது. அதைப் படித்து நாமெல்லாம் பயன்பெற வேண்டும். இந்த இளம் மௌலவிமார்கள், திருக்குர்ஆன் ஷரீஃபைச் சுமந்திருக்கின்ற ஹாஃபிழ்மார்கள்... இவர்களுடைய எதிர்கால வாழ்க்கையை அல்லாஹு தஆலா பிரகாசமானதாக ஆக்கித்தந்தருள்வானாக. இவர்களுக்கு வளமான வாழ்வையும் நலமானவாழ்வையும் தந்தருள்வானாக.

இவர்களுக்கு ஸாலிஹான மனைவிமார்களை அல்லாஹ் அமைத்துத் தருவானாக. இவர்கள் கற்ற கல்வியின்படி அமல் செய்வதற்குண்டான தவ்ஃபீக்கை அல்லாஹ் இவர்களுக்குக் கொடுத்தருள்வானாக. மேலும் மேலும் கல்வி ஞானத்தை அல்லாஹ் இவர்களுக்கு அதிகப்படுத்திக் கொடுப்பானாக.

இவர்களை உருவாக்கிய, மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியின் சேவைகளை அல்லாஹ் கபூல் செய்து அருள்வானாக!.இந்த மதுரஸாவின் சிறப்பை அல்லாஹ் மேலும் மேலும் வளர்ந்தோங்கச் செய்வானாக. இந்த மதுரஸாவின் புகழை அல்லாஹ் விண்முட்ட வளரச் செய்வானாக! ஆமீன் வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று பிரார்த்தனை செய்து, வாய்ப்பளித்த நல்லோர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு. **(தொடர்ந்து பேசுவார்கள்)**

**நெகிழ்ச்சித் தொகுப்பு : இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி, M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி**

---

**உமர்(ரலி) அவர்களின் – பெயர் நரகத்தின் பூட்டு எதற்காக?**

ஒரு முறை அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள், உமர் (ரலி) அவர்களின் மகனான அப்துல்லாஹ் (ரலி) அவர்களை, நரகப் பூட்டின் மகனே, என்று அழைத்தார்கள் இந்த விஷயத்தை தந்தை உமர் (ரலி) அவர்களிடம் சென்று மகன் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கவலையுடன் சொன்ன போது உமர் (ரலி) அவர்கள், அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்களிடம் வந்து ஏன் இது போன்று வார்த்தையைச் சொன்னீர்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நபி மூஸா (அலை) அவர்கள் கூறினார்கள்: பிற்காலத்தில் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுதாயத்தில ஒருவர் வருவார். அவர் பெயர் உமர் இப்து கத்தாப் என்று சொல்லப்படும். அவர் அந்த சமுதாயத்தில் இருக்கும் வரை நரகத்தின் கதவு பூட்டப்பட்டிருக்கும். (மக்கள் அநியாயத்தின் பக்கம் போகாமல் பாவம் செய்து நரகிற்கு செல்லாமல் அவர் நீதமானாக இருந்து) நரகத்தின் பூட்டாக இருப்பார். ஆனால் அவர் இறந்தபிறகு நரகத்தின் கதவு திறக்கப்பட்டுவிடும். மக்கள் தன்னுடைய மனோ இச்சையின் பக்கம் சென்று பல கூட்டங்களாகப் பிரிந்து விடுவர். இந்த விஷயத்தை மூஸா (அலை) அவர்கள் வழி வந்த என் தாத்தா என் தந்தையிடம் கூறியதை என் தந்தை எனக்குச் சொன்னார்கள். என்று கூறினார்கள் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் அவர்கள்.

(நூல் நுஜ்ஹதுல் மஜாலிஸ் 2/3/8)



# மதுரஸா நன்கொடை



### திண்டுக்கல்

1. நக்கம்பாடி ரஹ்மத் நிஷா கண் பார்வை நன்றாக தெரிய நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/-ம்,

2. உத்தமபாளையம் முகமது சித்திக் நன்கொடையாக ரூ. 6300/-ம்,

3. உத்தமபாளையம் தௌபீக் நன்கொடையாக ரூ. 800/-ம்,

4. உத்தமபாளையம் நஜியா நன்கொடையாக ரூ. 800/-ம்,

5. உத்தமபாளையம் முகமது சித்திக் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 800/-ம்,

6. உத்தமபாளையம் அப்துல் ஜப்பார் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 1500/-ம்,

7. உத்தமபாளையம்முகமது ஆரிஃப் நிய்யத் நிறைவேற பதுறு மவ்லிது ஓதி துஆ செய்ய ரூ. 3000/-ம்.

8. திண்டுக்கல் I. சாதிக் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

9. மேலத்திருப்பந்துருத்தி M. நிஷார் அஹ்மது நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 500/-ம்,

10. கிளியனூர் A. அப்துல் பத்தாஹ் உடல் ஆரோக்கியத்துடன் தைரியமான சந்தோஷ நல்வாழ்விற்க்கு துஆ செய்ய ரூ. 500/-ம்,

11. மன்னார்குடி அப்துல் கபூர் பர்வீன் பானு குடும்பத்தினர் துஆ செய்ய ரூ. 2000/-ம்,

12. திண்டுக்கல் M. நதிர் S/O J. முஹம்மது சதக்கத்துல்லா நிய்யத் படி செப்டம்பர் மாதம் நன்கொடை ரூ. 1600/-ம்,

13. மதுரை K. புதூர் துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/-ம்,

14. மதுரை K. புதூர் S. ஜரினா பேகம் அவர்களின் பேரன் ஃபரீத் உடல் நலம் பரிபூரண சுகத்துடன் நல்வாழ்விற்க்கும் தேர்வில் வெற்றி பெற்று டாக்டர் சீட்டு கிடைக்க நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500/-ம்,

15. சென்னை **S.** சர்மிளா உசேன் துஆ செய்ய சதக்கா ரூ. 1000/-ம்,

16. காரைக்குடி **K.** சாகுல் ஹமீது **K.** நஜீலா பேகம் சிறப்பாக திருமணம் முடித்து மணமக்கள் சந்தோஷமான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 2000/-ம்,

17. மேலதிருப்பூந்துருத்தி **J.** ஜமால் பார்ஸா நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 500/-ம்,

18. உத்தமபாளையம் அப்துல் ஜப்பார் நிய்யத்து துஆ செய்ய ரூ. 1000/-ம்,

19. காரைக்கால் **R.A.** அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் அழிந்து குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500/-ம்,

20. கிளியனூர் **A.** அப்துல் பத்தாஹ் கடன் இல்லா வாழ்க்கை ஆரோக்கியமாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டி துஆ செய்ய ரூ. 5000/-ம்,

21. கிளியனூர் முஹம்மது ஃபஹிம் ஆரோக்கியமாகவும் மகழ்ச்சியாகவும் இருக்க வேண்டி துஆ செய்ய ரூ. 500/-ம்,

22. பாக்கம் கோட்டூர் அப்துல் அஜிஸ் மற்றும் அயானா உடல் பரிபூரண சுகம் அடைய வேண்டி துஆ செய்ய ரூ. 500/-ம்,

23. மடத்துக்குளம் **S.P.** சேக் அப்துல்லா & சாலிஹா பீ வீ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 1000/

24. பரமக்குடி தமீமுன் அன்சாரி பிறந்த நாளை முன்னிட்டு உடல் நலத்துடன சிறப்பான பரக்கத்தான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 2000/-ம்,

25. திண்டுக்கல் **PMA** .அஷ்ரப் அலி மகள் அ. முஜிபா பர்வீன் கால் எலும்பு முறிவு ஆபரேஷன் இல்லாமல் சரியாக நிய்யத் செய்து துஆ செய்ய உணவுக்காக ரூ. 5000/-ம்,

26. காந்திகிராமம் **N.** பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 900/-ம்,

27. வழுத்தூர் ஹஃஸா அஹ்னாப் துஆ செய்ய ரூ. 1500/-ம்,

28. திண்டுககல் **M.** மீராஷா அவர்களின் தகப்பனார் மர்ஹும் **M.** மல்கர்ஷா அவர்களின் வருட பத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய காலை சிறப்பு உணவுக்கு ரூ. 5000/-ம்,

29. பேராவூரணி ரோஜாபானு மகளின் நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 1000/-ம்,

30 கடலகுடி இஹிஸான் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 500/-ம்,

31. வழுத்தூர் பெயர் கூறாத அன்பர் அல்லாஹ்வின் பெயரில் சதக்கா ஆடு 1 க்கு ரூ. 12000/-ம்,

32. பாக்கம் கோட்டூர் ரஹ்மத் நிஷா அவர்களின் கணவர் மர்ஹூம் பஜ்ருல் ஹக் அவர்களின் மஃபிரத்திற்கு துஆ செய்ய ரூ. 2000/–ம்

33. பாக்கம் கோட்டூர் இம்தியாஸ் அகமது திருமண நாளை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 500/–ம்,

34. பாக்கம் கோட்டூர் ரிஹானா ஃபர்ஹத் துஆ செய்ய ரு. 500/–ம்,

35. பாக்கம் கோட்டூர் பஹ்மிதா துஆ செய்ய ரூ. 500/–ம்,

36. பாக்கம் கோட்டூர் S. பாத்துமா பீவி அவர்களின் வீட்டில் வாடகைக்கு இருப்பவர்கள் பிரச்சனை இல்லாமல் காலி செய்ய வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500/–ம்,

37. பாக்கம் கோட்டூர் அஃப்ஸல் இன்டர்வியூவில் சீக்கிரம் வந்து பாஸ் ஆக நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500/–ம்,

38.திருச்சி மர்ஹூம் எஸ்.பி.ஆரிப் அவர்கள் நினைவாக மனைவிரஜியா பேகம் ரூ.2000/–ம், முதல்வருட பாத்திஹாவை முன்னிட்டு ரூ.2000/–ம்

**திருச்சி**

ஜனாப். எ. ஜின்னா சாஹிப், , நன்கெடையாக ரூ. 1500/–ம்,

2. ஜனாப். கான் முஹம்மது, நன் கொடையாக ரூ. 1000/–ம்.

3. ஜனாப். எ. நைநார் முஹம்மது அன்சாரி, நன்கொடையாக ரூ. 1000/–ம்,

மற்றும் ஜனாபா ராபி, குமுளி வேலை டிரான்ஸ்பர் கிடைத்து குடும்பத்துடன் இருக்க ரூ. 2000/–ம்,

5. ஜனாப். சிக்கந்தர் நஜ்மா ஹபீபுல்லா, நிய்யத் நிறைவேறியதற்காக ரூ. 2000/–ம்,

6. ஜனாப். எஸ். காஜாமொய்தீன், நன்கொடையாக ரூ. 10,000/–ம்,

7. ஜனாப். கான் முஹம்மது, நன்கொடையாக ரூ. 1000/–ம்

8. ஜனாப் . கே. பாஹிம், உண்டியல் மூலம் சேமிப்பு ரூ. 2300/–ம்.

9 . ஜனாப். கே. முஹம்மது ஜக்கி மற்றும் குடும்பத்தினர், நன்கொடையாக ரூ. 990/–ம்,

10. ஜனாப் . கே. இப்ராஹிம் மற்றும் குடும்பத்தினர், நன்கொடையாக ரூ. 990/–ம்,

11. ஜனாப். கே. பாஹிம் மற்றும் குடும்பத்தினர், நன்கொடையாக ரூ. 990/–ம்,

12. ஜனாப். எஸ். காஜாமொய்தீன், நன்கொடையாக ரூ. 990/–ம்,

13. ஜனாப். எ. நைநார் முஹம்மது அன்சாரி நன்கொடையாக ரூ. 1000/–ம்,

14. ஜனாப். எ. ஜின்னா சாகிப், நன்கொடையாக 1500/–ம்,

15. ஜனாப். கான் முஹம்மது, நன்கொடையாக ரூ. 15000/–ம்,

16. ஜனாப். கான் முஹம்மது , , நன்கொடையாக ரூ. 1000/–ம்,

**மதுக்கூர்**

ஓ.பி.யு.ஏ.பஷீர் அஹமது பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு துஆ செய்ய மாத சந்தா ரூ.1500/ம்,

கே.செய்யது அகமது எஸ்.பெனாசிர் இவர்களின் மகளார் எஸ். முஃப்லிலா ஷெரீன் பிறந்த நாளை (13.10.24) முன்னிட்டு நீண்ட ஆயுளுக்கும் நல்வாழ்வுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.2000/ம்,

ஹெச். சலாமத் உண்டியல் சேமிப்பு மூலம் நன்கொடை ரூ.3000/ம்,

ஏ.ஜாஹிர் உசேன் மகன் முஹம்மது இஸ்ஹாக் வெளிநாடு செல்வதால் அவருடைய நாட்டங்கள் நிறைவேற துஆ செய்ய இரவு உணவுக்கு ரூ.5000/ம்,

அப்துல் ரவூப் அவர்கள் மனைவி பரீதா பீவி நன்கொடை ரூ.5000/ம்,

ஏ. பல்கீஸ்பீவி– அப்துல் குத்தூஸ் பேரப்பிள்ளை பூரண சுகம் பெற வேண்டி துஆ செய்ய ரூ.2000/ம்,

எம்.எஸ்.அப்துல் வஹாப் அவர்களின் பேரன் முஹம்மது பாதிஹ் பிறந்த நாளை (22.10.24)முன்னிட்டு துஆ செய்ய ரூ.5000/ம்,

அப்துல் அஹது தனது நாட்டங்கள் நிறைவேற துஆ செய்ய நன்கொடை ரூ.5000/ம்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை வாப்பா நாயகம் அவர்கள் பொருட்டால் நிறைவேற்றியருள்வானாக! ஆமீன் !**

---

## கனவொன்று கண்டேன்

நேற்றிரவு கனவொன்று கண்டேன். அழகிய பூந்தோட்டம். அதன் ஓர் அறையில் நம் உயிரினும் மேலான சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் தரையில் விரிக்கப்பட்ட விரிப்பில் சம்மணமிட்டு அமர்ந்துள்ளார்கள். அவர்கள் முன்னால் தொழுகையில் இருப்பதுபோல நான் அமர்ந்துள்ளேன். அங்கு வேறு யாருமில்லை. அப்போது நான், ஷைகுனா தாங்கள் மறைந்தாலும் எங்களுடன்தான் இருக்கிறீர்கள் என அனைவரிடமும் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன் ஷைகுனா என்று கூறினேன். அதற்கு நீங்கள் உண்மையைத்தான் கூறுகிறீர்கள் என்று கூறினார்கள். இந்தத் திருவாக்கை சங்கைமிகு ஷைகுனாவின் திருவாயால் கேட்பதற்கு நஸீபு தந்த சங்கைமிகு ஷைகுநாயகத்துக்கே புகழனைத்தும். அல்ஹம்து லில்லாஹ்.

**ஜி.ஷர்புத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய். பெரம்பலூர்.**

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

நாளது ஹிஜ்ரி 1446 ஜமாதுல் அவ்வல் பிறை 1 (4.11.24) திங்கட்கிழமை

தஞ்சை மாவட்டம் – சம்பைப்பட்டினம் – மறவன் வயல்.

**மௌலானா தோட்டத்தில் மறைந்து வாழும்**

**ஞானமகான், வலிய்யுல் அக்பர், செய்யிதினா**

# ஜமாலிய்யா செய்யிது முஹம்மது மௌலானா

அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின்

## 77 ஆவது புனித கந்தூரி விழா

**சங்கைமிகு அஷ்ஷைகு, ஜமாலிய்யா**

## அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா

**நாயகம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.**

காலை **10.00** மணியளவில் மௌலூது ஷரீபு ஓதியும், **11.30** மணியளவில் ராத்திபு ஓதியும் பகல் **1.00** மணியளவில் கந்தூரி தப்ரூக் (உணவு) வழங்கப்படும்.

சங்கைக்குரிய மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் முரீதீன்கள், முஹிப்பீன்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு ஈருலக நற்பேறுகளை அடைந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அந்த,அந்த ஊர் முரீதுகள், அஹ்பாபுகள் விழாவிற்கான காணிக்கைகளை பேராவூரணி **L.A.M.** சாதிக் அலி அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் வஸ்ஸலாம்.

இவண் :

**வாரிசுகள், கலீபாக்கள் சார்பாக கந்தூரி விழாக் குழுவினர்**

**காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி**

**L.A.M. முஹம்மது சாதிக் ஹக்கிய்யுல் காதிரிய்**

**பாம்பே கிளாத் ஸ்டோர்,**

**4, ஆவணம் கார்னர் ரோடு, பேராவூரணி – 614 804.**


பஸ்ரூட் : பட்டுக்கோட்டை **to** கட்டுமாவடி சாலையில் சம்பைப்பட்டினம்

மௌலானா தோட்டம் நிறுத்தம்.

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee